Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

ஸ்ரார் செரமிக்ஸ்
Importers & Distributors
of Tiles
Sanitary ware &
Bathroom Accessories
இல. 05, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
T.P 021 5672061
C231

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2041 | கார்த்திகை 20 | திங்கட்கிழமை | (06.12.2010) | பக்கங்கள் 12 | ஓசை – 67



# லியாம் பொக்ஸ் மீது கண்டனம்; இலங்கையை ஆதரித்ததன் விளைவு!

## சீறிச் சினக்கும் பிரிட்டிஷ் பத்திரிகைகள்

(லண்டன்)

**இலங்கை அரசுக்கு ஆதரவாக செயற்படும் பிரிட்டிஷ் அரசியல்வாதியும் பிரித்தானியாவின் பாதுகாப்பு செயலாளருமான லியாம்பொக்ஸ"க்கு எதிராக பிரிட்டிஷ் பத்திரிகையான 'த கார்டியன்' காரசாரமான கண்டனங்களை வெளியிட்டுள்ளது.**

இலங்கை அரசுக்கு ஆதரவான கொள்கையை கொண்டுள்ள பிரித்தானியாவின் பாதுகாப்புச் செயலாளர் லியாம் பொக்ஸ் ஜனாதிபதி மஹிந்தவை சென்று சந்தித்தது ஆச்சரியமானது அல்ல, ஆனால் அவர் மட்டுமே மஹிந்தவை சந்தித்த பிரித்தானியா நாட்டின் அரசியல்வாதி என 'த கார்டியன்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அனைத்துலக மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆனால் பிரித்தானியாவின் பாதுகாப்புச் செயலாளர், மஹிந்தவை தனிப்பட்ட முறையில் சந்தித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வலுவடையும் வர்த்தக உறவு இலங்கைக்கு பாகிஸ்தான் நிதி

(கொழும்பு)

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்த பாகிஸ்தான் முன்வந்துள்ளது.

இதன் அடிப்படையில், 20 கோடி அமெரிக்க டொலர்களை இலகு கடனாக பாக்கிஸ்தான் இலங்கைக்கு வழங்க முன்வந்துள்ளது.

இந்த நிதியினைக் கொண்டு பண்டமாற்று முறையிலான வர்த்தகத்தை இலங்கையினால் ஆரம்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பண்டமாற்று திட்டத்தின் மூலம் 100 கோடி வரையில் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியும்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## மழை பொழிவு தொடரும்

(கொழும்பு)

காலநிலையில் ஏற்பட்டுள்ள சீரற்ற குழப்பநிலை காரணமாக நாட்டின் பல பாகங்களிலும் மாலை மற்றும் இரவு வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென வானிலை அவதான நிலையம் நேற்று தெரிவித்துள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அதிக மழை பெய்யக்கூடுமென வானிலை அவதான நிலைய வானிலையாளர் எம்.வசந்தகுமார் தெரிவித்தார்.

மேலும் மாலை மற்றும் இரவு வேளைகளில் கடற்கரையை அண்டிய பகுதிகளிலும்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கண்ணீருடன் காத்திருக்கும் உறவுகள் கண்ணீரைத் துடைக்க ஆணைக்குழு முயற்சிக்குமா?

(திருகோணமலை)

பிள்ளைகளை மீட்டுத் தாருங்கள் என பெற்றோரும், கணவன்மார்களை கண்டுபிடித்துத் தாருங்கள் என மனைவியரும் உருக்கமாகக் கெஞ்சினர் நேற்றைய நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணையில்.

நேற்றைய நல்லிணக்க ஆணைக் குழுவின் விசாரணை திருமலையின் குச்சவெளி பிரதேசசபையில் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நடைபெற்றன. திருமலையில் பெய்துவரும் கடும் மழையின் மத்தியிலும் பெருமளவான மக்கள் சாட்சியமளிக்க காத்திருந்து சாட்சியமளித்தனர்.

நேற்றைய விசாரணையின் இறுதியில் கருத்து தெரிவித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் சி.ஆர்.டி.சில்வா - 146 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாகவும், அதில்

(11 ஆம் பக்கம் பார்க்க)



## வடபகுதியில் உளநல மேம்பாடு புதிய செயற்திட்டம் அமுலாகிறது

### அவுஸ்திரேலியாவின் நிதியுதவி கிடைக்கும்

(கொழும்பு)

வடபகுதி மக்களின் உளச் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு அவுஸ்திரேலியா அரசு 50 மில்லியன் ரூபாவை வழங்கத் தீர்மானித்துள்ளது.

யுத்தம் காரணமாக வடக்கு மக்கள் உள ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மக்களின் உளச் சுகாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் கெத்தி க்ளுக்மன் தெரிவித்துள்ளார்.

சுமார் ஒரு வருட காலத்திற்கு இந்தத்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகர் - தீவகம் போக்குவரத்து துண்டிப்பு பயணிகள் சேவைகள் அனைத்தும் இரத்து



(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணை வீதியூடான போக்குவரத்துக்கள் வீதி சேதமடைந்ததன் காரணமாகவும் பயணிகள் பாதுகாப்பின் நிமித்தமும் வீதி சீர்செய்யப்படும் வரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் மு.ப 10.30 மணியுடன் இப்பகுதிகளினூடான தீவுப்பகுதிக்கான இலங்கை போக்குவரத்து சேவை பஸ் வண்டிகளும், தென்பகுதி சுற்றுலாப் பணிகளின் பஸ் வண்டிகளும் மற்றும் தனியார் பஸ்

(11 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு - கூட்டமைப்பு உறவில் விரிசல்; விக்கிலீக்ஸ் இணையத்தகவலின் தாக்கம்!

(கொழும்பு)

விக்கிலீக்ஸ் இணையத்தளம் வெளியிட்டு வரும் இரகசியத் தகவல்களால் அரசுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் இடையில் விரிசல் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் தோன்றியுள்ளன.

யுத்தம் நடைபெற்ற காலத்திலும் யுத்தம் முடிவுற்ற பின்னரும் தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசியல் தலைவர்கள் பலர் வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் தமிழர் பிரச்சினை குறித்து அவ்வப்போது விளக்கமளித்து வந்துள்ளனர்.

இதன்போது பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசுக்கெதிரான விடயங்கள் பலவற்றை வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் பகிர்ந்து கொண்டுள்ளனர். அத்துடன் இலங்கை அரசு தொடர்பான வெளிவராத இரகசியங்கள் பலவற்றையும் இராஜதந்திரிகளுக்கு வழங்கியுள்ளனர்.

குறிப்பாக அமெரிக்கத் தூதரகம் தமிழ் தேசிய கூட்டமைப்பினருடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் மேற்கொண்ட சந்திப்புக்கள் தொடர்பாக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்துக்கு அனுப்பிவைத்த அறிக்கை தற்போது விக்கிலீக்ஸ் மூலமாக அம்பலமாகியுள்ளது.

இலங்கை அரசின் சட்ட திட்டங்களின்படி உள்நாட்டு இரகசியங்களை வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் பகிர்ந்துகொள்வது சட்டவிரோதமானது என்று கருதப்படுகிறது.

இந்த அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக

(11 ஆம் பக்கம் பார்க்க)



# பயணிகள் பஸ் சேவையை விஸ்தரிக்க பொதுமக்கள் விடுக்கும் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - காங்சேன்துறை வீதியில் சீரான பஸ் போக்குவரத்துச் சேவை இன்மையால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைப் போக்குவரத்து பஸ் வண்டிகள் இவ்வீதியில் போதியளவு சேவையிலீடுபடுத்தப்படாமையால் தினமும் காலை வேளைகளில் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தினமும் காலை வேளைகளில் அரச உத்தியோகஸ்தர்கள், ஆஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளர்கள் மற்றும் இதர பணிகளுக்காக யாழ்ப்பாணம் செல்வோர் போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகள் போதியளவு சேவையில் ஈடுபடாமையால், தனியார் சிற்றூர்திகளுக்காகக் காத்திருந்து நெரிபட்டு செல்லவேண்டியுள்ளனர்.

அதிகளவு பயணிகளுடன் வரும் சிற்றூர்திகள், கோண்டாவில், குளப்பிட்டிச் சந்திப் பகுதி மற்றும் கொக்குவில் பகுதிகளில் நிற்கும் பயணிகளை ஏற்றாமல் சென்று விடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காலை 9.00 மணிக்குப் பின்னர் சுமார் ஐந்து தனியார் சிற்றூர்திகளுக்குப் பின்பே இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் வண்டி ஒன்று வருவதாகக் கவலை தெரிவிக்கும் பயணிகள், இலங்கைப் போக்குவரத்துச் சபையானது கூடிய அளவு பஸ்களை போக்குவரத்துக்குப் பயன்படுத்தமாட்டாதா? என்று கேள்வி எழுப்புகின்றனர். (க)

## சமுர்த்தி வங்கிகளில் ஒளிவிழா நிகழ்வு

(தொல்புரம்)

எதிர்வரும் நத்தார் பண்டிகையையொட்டி கிறிஸ்தவர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் உள்ள சமுர்த்தி வங்கிகளில் நத்தார் தின விடேச சமய நிகழ்வுகளை ஒழுங்கு செய்யும் படி இலங்கை சமுர்த்தி அதிகார சபை, சகல பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கும் சமுர்த்தி வங்கிச் சங்கங்களுக்கு சுற்றறிக்கை ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

இதன்படி, சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் தமது வலயப் பிரிவில் நத்தார் பாடல்கள் மற்றும் நத்தார் தின செய்திகளை மதகுருக்களின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்ய முடியும். இதன் மூலம் பொதுமக்களின் சேமிப்பு பழக்கத்தையும் ஊக்குவிக்க முடியும் என சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, தைப்பொங்கல் விழா மற்றும் சித்திரைப்புது வருடப் பிறப்பின் போதும் விசேட சேமிப்பு வாரம் சமுர்த்தி வங்கிகளால் கொண்டாடப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். (26)

## வெள்ளப் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு ஈ.பி.டி.பியால் சமைத்த உணவு வழங்கப்பட்டன



கடந்த சில நாட்களாக பெய்து வரும் அடை மழை காரணமாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட யாழ். கோப்பாய் சூசையப்பர் கோயிலடி மற்றும் கோப்பாய் மத்தி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு ஈ.பி.டி.பி.யினர் சமைத்த உணவுப் பொதிகளை வழங்கினர்.

மேற்படி பிரதேச மக்கள் இடம் பெயர்ந்து சூசையப்பர் சனசமூக நிலையம், முத்துமாரி அம்மன் கோயில் மற்றும் உரும்பிராய் நலன்புரி சனசமூக நிலையங்களில் தற்காலிகமாக தங்கியுள்ள இம்மக்களுக்கு, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் நேற்று மதியம் மற்றும் இரவு நேரத்திற்குமென இரண்டு நேரத்திற்கும் சுமார் 600 பேருக்கு சமைத்த உணவுப் பொதிகளை வழங்கினர். இந்தப் பொதிகளைக் கோப்பாய் ஈ.பி.டி.பி. பிரதேச அமைப்பாளர் ஜங்கரன் தலைமையில் அப்பிரதேச கட்சி உறுப்பினர்களால் வழங்கப்பட்டது.

## ஆனையிறவு உப்பளம் புனரமைப்பு சாத்தியம் குறித்து அரசு ஆராய்வு

ஆனையிறவு உப்பளத்தை அடுத்த வருடத்தில் மீளவும் உப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தக்கூடிய சாத்தியம் குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது.

இப்பொழுது இப்பகுதியில் உடனடியாக நீர் பெறக்கூடிய நீர் விநியோகமும் கிடையாது. எட்டு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள இயக்கச்சியில் இருந்தே ஆனையிறவுக்கு நீர் கொண்டுவர வேண்டியுள்ளது. இவ்வாறு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சின் அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

யுத்தம் உச்சக் கட்டத்தை அடைந்ததும் ஆனையிறவு உப்பளம் கைவிடப்பட்டது.

அணைகள் கட்டடங்கள் மற்றும் உப்புப் பாத்திகள் கைவிடப்பட்டன. அல்லது கவனிப்பாரற்று அழிந்து போயின. உழவு இயந்திரங்கள் மற்றும் புல்டோசர்களும் இல்லை என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டுத் தேவைகளுக்கும், தொழிற்சாலைகளுக்குமாக வருடமொன்றிற்கு 195,000 மெட்றிக் தொன்கள் உப்பு தேவைப்படுகின்றது இதில் நாற்பது வீதம் இறக்குமதி செய்யப்படுகிறது. அதனால், 380 மில்லியன் ரூபாய் செலவாகின்றது என்று அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. ஆனால், ஆனையிறவு உப்பளம் வருடமொன்றுக்கு 70,000 முதல் 80,000 மெட்றிக் தொன்கள் உப்பை உற்பத்தி செய்தது. ஆகவே, உப்பளத்தை மீள ஆரம்பிப் பது பற்றி ஆராயப்படுகிறது. இப்பகுதியில் கண்ணிவெடி அகற்றும் வேலையைப் பாதுகாப்பு அமைச்சு துரிதப் படுத்தயுள்ளது. 2011 நடுப்பகுதியில் ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கோணாவில் முறிப்புப் பாலம் சேதம் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதம்

### கிளிநொச்சி நகருடன் தொடர்புகள் துண்டிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலிருந்து முறிப்பு ஊடாக ஸ்கந்தபுரம் செல்லும் வழியிலுள்ள கோணாவில் முறிப்புப்பாலம் உடைந்துள்ளதனால், ஸ்கந்தபுரம் மற்றும் அக்கராயன் பகுதிகளுக்கும், கிளிநொச்சிக்குமான தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன.

கடந்த கால போர் நடவடிக்கை காரணமாக, இந்தப் பாலம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் அந்தப் பாலம் தென்னை மரக்குற்றிகள் அடுக்கப்பட்டு கிரவல் மண் போடப்பட்டு தற்காலிகமாகச் சீர் செய்யப்பட்ட நிலையில் போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டு வந்தது.

தற்போது தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக, புதுமுறிப்புக் குளம் வழமையை விட அதிகளவில் வான்பாய்கிறது. இவ்வாறு வான்பாயும் வெள்ளம் இந்தப் பாலத்தை மேவிப் பாய்வதனால், தற்காலிகமாகச் சீர்செய்யப்பட்ட குறித்த பாலம் முற்றாக உடைந்து கிளிநொச்சியின் மேற்குப் பகுதிக்கான தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் பேருந்துகளில் கிளிநொச் சிக்கும் ஸ்கந்தபுரம், அக்கராயன் பகுதிகளுக்கும் சென்றவர்கள் உடைந்த பாலத்தின் இரண்டு பகுதிகளிலும் காத்திருக்கின்றனர்.

இதேவேளை, புதுமுறிப்புக்குளம் வான்பாய்வதால் சோலைநகர் கிராமம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால் அந்தக் கிராமத்திலிருந்த குடும்பங்கள் அங்குள்ள பொதுநோக்கு மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (29)

## மழை வீழ்ச்சி

நேற்று காலை 8.30 தொடக்கம் மாலை 5.30 வரையான காலப்பகுதியில் வவுனியா மாவட்டத்தில் அதிகூடிய மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. குறித்த நேரத்தில் வவுனியா மாவட்டத்தில் 33.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக கால நிலை அவதான நிலையம் தெரிவிக்கின்றது.

## பரீட்சை ஒத்திவைப்பு

(கொழும்பு)

பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் பதவிக்கு ஆட்களை சேர்ப்பதற்காக கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நேற்று நடைபெறவிருந்த எழுத்துமூல பரீட்சை எதிர்வரும் 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்தார்.

இந்நிலையில் நேற்று நடைபெறவிருந்த பரீட்சைக்காக வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ள பரீட்சைக்குப் பயன்படுத்த முடியுமெனவும் அவர் கூறினார்.

கொழும்பிலுள்ள அசோகா வித்தியாலயத்திலும், யாழ். மத்திய கல்லூரியிலும் எதிர்வரும் 11ஆம் திகதி மேற்படி பரீட்சை நடைபெறவுள்ளது.



பருத்தித்துறை வட - இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவிலே மாணவத் தலைவி மங்கள விளக்கேற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தலைவர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (01)

எந்தநாட்டின் மக்களிடையே பல வியாதிகளும், தன்னடக்கம் இல்லாத தன்மையும், மலிந்திருக்கின்றனவோ அந்த நாட்டில் நீதிமன்றங்களும், வைத்தியசாலைகளும் பெருகிக்கொண்டிருப்பதுடன் எந்த நேரமும் திறந்தே கிடக்கும்.

– பிளாட்டோ–

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

# விழிப்பு அவசியம்

இடைவிடாது பெய்யும் மழையினால் குடாநாடே வெறிச்சோடிக்கிடக்கின்றது. வெள்ளக்காடாக வெளிகளும், குட்டிக குட்டிக் குளங்களாக வீதிகளும் காணப்படுகிறது.

ரசித்தால் அழகுதான். ஆனால், தண்ணீர் மறைத்து வைத்திருக்கும் அசிங்கங்களை மறந்து அவற்றை ரசிக்க முடியவில்லை.

வெள்ளம் தேங்கி நிற்பதால் நுளம்புப் பெருக்கமும், நோய்த் தோற்றுகளும் மிக இலகுவாகப்பரவுகின்ற வாய்ப்பு அதிகமாகும். காய்ச்சல், தடிமன், இருமல் போன்ற நோய்களும் நமது சிறுவர்களை வாட்டி எடுப்பதை வைத்தியசாலையில் நிற்கும் கூட்டம் சான்று பகர்கின்றது.

சிறுவர்களுக்கு அடுத்தபடியாக நம் மூத்தவர்கள்தான் இந்தக் குளிரில் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர். நோய்த் தாக்கங்களுக்கும் ஆளாகின்றனர்.

குடாநாட்டில் திட்டமிட்ட நீர் வழிந்தோடும் வசதிகள் இன்மையால், வீதிகளிலும், பொது இடங்களிலும் மழை நீர் அப்படியே தேங்கி நிற்கின்றது. ஆகவே மழை நீர் தேங்கி நிற்காதபடி தற்காலிக வடிகால்களையாவது அமைத்து நீர் வழிந்தோடச் செய்ய வேண்டும்.

சுகாதாரப் பிரிவினரும், உள்ளூராட்சித் துறையினரும் இவ்விடயத்தில் விரைந்து செயற்பட வேண்டும். பொதுமக்களும் தமது அயலில் மழை நீர் தேங்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

வெள்ளம் ஒருபுறமும், வீதியில் கொட்டப்படும் கழிவுகள் ஒருபுறமுமாக, நுர்நாற்றம் வீசும் பல வீதிகளை அவதானிக்க முடிகிறது.

இவ்விடயத்தில் உள்ளூராட்சித் துறையினர் வழமையான கடமைக்கும் மேலதிகமாக கவனமெடுத்து பணி செய்தால் வரவேற்கலாம். துர்நாற்றம் வீசும் கழிவுகள் மற்றும் கவனிக்கப்படாத குப்பை மேடுகள், கழிவு நீர் தேக்கங்கள் தொடர்பில் பொதுமக்கள் உரிய பிரிவினருக்குத் தெரியப்படுத்தியும், நாம் வாழும் பகுதியின் சுத்தத்துக்கு உதவலாம். நோய்த் தொற்றிலிருந்து நம்மையும், நமது அயல் உறவுகளையும் பாதுகாக்கலாம்.

மூக்கைப் பிடித்துக் கொண்டு தாண்டிச் செல்வதும், காறித்துப்பிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொள்வதும், சுகாதாரம் சார்ந்த செயற்பாடோ, சுத்தம் சார்ந்த முடிவோ அல்ல. உண்மையைச் சொன்னால், அது சமூகப் பொறுப்பிலிருந்து ஒழிந்துகொள்ளும் சுயநலமேயாகும்.

அடைமழை காலத்தில் திருடர்களின் கைவரிசையும் ஆங்காங்கே நடந்து வருவதாக செய்திகள் கூறுகின்றன. திருட்டுச் சம்பவங்களில் உள்ளூர் மற்றும் வெளியூர் திருடர்கள் தொடர்புபட்டிருப்பதும் தெரியவருகின்றது.

ஆகவே, மகாஜனங்கள், திருடர்களிடமிருந்து மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். புறச்சூழல் நமக்கு எதிரானதாகவே இருக்கின்றது என்பதை கவனத்தில் கொண்டு நாம் விழிப்புடன் இருப்போம்.

நம்மையும், நம்மைச் சார்ந்தவர்களையும் பாதுகாப்பதும், கவனமெடுக்கச் செய்வதும் சமூகத்தின் பாதுகாப்பாக அமையுமல்லவா?

–ஆசிரியர்.

# மேலதிகமாகவுள்ள ஆசிரியர்களை இடம்மாற்றுவதற்கு நடவடிக்கை

(நமதுநிருபர்)

மேலதிக ஆசிரியர்களுடன் இயங்கி வரும் பாடசாலைகளில் இருந்து ஆசிரியர்களைப் பெற்று, ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துலகுணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கல்வி அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தின் போது உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். கல்வி விவாதத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

தற்போது கல்வித்துறையில் நிலவிவரும் பல்வேறு விதமான சிக்கல்களுக்கும் தீர்வு காணும் வகையில் மிகவிரைவில் சிறந்த ஒரு கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தவுள்ளோம். நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் மூன்று லட்சம் மாணவர்கள் முதலாம் வகுப்பில் சேர்க்கப்பட்ட போதும் பல்கலைக்கழகத்திலிருந்து சுமார் 20 ஆயிரம் பேரே பட்டம் பெற்று வெளிவருகின்றனர்.

பரீட்சைக்குரிய கல்வியை நாம் நடைமுறைப்படுத்தி வருவது தேசிய ரீதியில் கல்வித்துறையில் தாம் காணும் பெரும் குறைபாடு ஆகும். தற்போது நடைபெறும் பரீட்சைகள் சில பொருத்தமற்றதாகவும், சில பாடங்கள் மாணவர்களுக்கு மன உளைச்சல்களை ஏற்படுத்துவதாகவும் உள்ளது.

நாட்டில் நூற்றுக்குக் குறைவான மாணவர்களைக் கொண்ட 22 ஆயிரத்து 897 பாடசாலைகளும், 1000 மாணவர்களுக்குக் குறைவாககொண்டுள்ள 8 ஆயிரம் பாடசாலைகளும் உள்ளன. கொழும்பில் பல பாடசாலைகள் குறைவான மாணவர்களையும், பெருமளவு ஆசிரியர்களையும் கொண்டு இயங்கி வருகின்றன. 13 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற ரீதியில் அங்கு ஆசிரியர்களின் கல்வி கற்பிக்கின்றன.

சுமார் 2 கிலோ மீற்றர் சுற்று வட்டத்தில் உள்ள ஆறு பாடசாலைகளில் கல்வி கற்கும் 1604 மாணவர்களுக்கு 120 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றார்கள். இப்பாடசாலைகளை ஒன்றாக்கி தமிழ், சிங்கள மொழிகளை வேறுவேறாகப் பிரித்து இயக்கினால் அங்குள்ள ஆசிரியர்களில் 20 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களை, ஆசிரியர்கள் பற்றாக்குறையுள்ள பாடசாலைகளுக்குப் பெற்றுக்கொடுக்க முடியும் என்றார்.



# உயர்பாதுகாப்பு வலயத்தில் இயங்கிய விபசார விடுதி பொலிஸாரால் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகைக்கு அருகில் அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் இயங்கி வந்த ஆடம்பர விபச்சார விடுதி ஒன்றைப் பொலிஸார் முற்றுகை இட்டுள்ளனர்.

லிபேட்டி பிளாசா கட்டடத் தொகுதியின் எட்டாவது மாடியில் உள்ள கட்டடம் ஒன்றில் இவ்விபச்சார விடுதி இயங்கி வந்துள்ளது. முற்றுகையின் போது விபச்சாரிகள் ஐவர் அங்கு கைது செய்யப்பட்டனர். இவர்களில் இருவர் ஐரோப்பியர்கள். மூவர் உள்நாட்டவர்கள். விபசார விடுதியின் உரிமையாளர் எட்டாவது மாடியில் உள்ள இக் கட்டடத்தில் மிகவும் நுட்பமான முறையில் மாற்றங்களைச் செய்துள்ளார்.

இதன்படி இக்கட்டடத்திற்குள் இருந்து படிக்கட்டுக்கள் மூலமாக ஏழாவது மாடியில் உள்ள இன்னொரு கட்டடத்தை சென்றடைகின்றமைக்கான இரகசிய பாதை ஒன்றை உருவாக்கி இருக்கின்றனர்.

ஏழாவது மாடியில் உள்ள கட்டடத்தில் தான் விபசாரம் இடம்பெற்று வந்திருக்கின்றது. பொலிஸாரால் மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் முக்கியத்துவம் வாய்ந்த அதிரடி நடவடிக்கைகளில் இம்முற்றுகையும் ஒன்றாகும்.

# ஆசிரியர்களின் தேநீர்ச் செலவுக்கு மாணவரிடம் பணம் கறக்கும் அதிபர்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களிடம் 200 ரூபா வீதம் அறவிடப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பாடசாலையில் அனுமதிப்பத்திரம் பெறும் மாணவர்களிடமிருந்து மேற்படி பணம், அதிபரினால் பெறப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் தேநீர் விருந்துபசாரத்திற்கெனச் செலவிடப்படுவதற்காக எனத் தெரிவித்தே இந்தப் பணம் மாணவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மக்கள் அண்மையில் தான் மீளக் குடியேறி படிப்படியாக தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வரும் நிலையில், பாடசாலை அதிபரின் மேற்படி நடவடிக்கை பல்வேறு தரப்பினர்களிடையேயும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

# திறப்புவிழா இரத்து

(காரைநகர்)

காரைநகர் பகுதிக்கென தனியான கல்விப் பணிப்பாளர் பணிமனை நேற்றைய தினம் திறக்கப்பட இருந்த போதிலும் எவ்வித காரணமுமின்றி அலுவலகத் திறப்புவிழா இரத்துச் செய்யப்பட்டது.

இந்தக் கல்விப் பணிமனையைத் திறப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில், மாணவர்களும் திறப்பு விழாவிற்கு, கொட்டும் மழையையும் பொருட்படுத்ததாது வந்திருந்த வேளை திடீரென திறப்பு விழா நிகழ்வு இரத்தச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (50)

# சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு

(கொழும்பு)

மாற்றுத்திறனுடைய மாணவர்கள் இம்முறை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வசதிகளை ஏற்படுத்தியுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கென மாற்றுத்திறனுடைய 254 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

எவ்வாறாயினும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்த்தும் அதே நேரம் இதுவரை விண்ணப்பம் செய்யாது இருக்கும் மாணவர்கள இது தொடர்பில் 0112784208 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியத்தர வேண்டுமெனக் கேட்கப்பட் டுள்ளது.

முறையான நேர்முகத்தேர்வின் பின்னர் அந்த மாணவர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும். கடந்த வருடம் மாணவர்களை மாற்றுத் திறனாளிகள் என்று கூறி சில பெற்றோர்கள் பரீட்சைகள் திணைக்களத்தை தவறாக வழிநடத்தியதனால் இந்த நடவடிக்கை இம்முறை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பாடல் போட்டியில் வெற்றிபெற்றோர்

(கொழும்புத்துறை)

யாழ்.கத்தோலிக்க மறைக்கோட்ட இளையோர் ஒன்றியத்தினரின் வருடாந்த பாடல் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் திரு மறைக்கலாமன்ற இசைத்துறைப் பொறுப்பாளர் இசைத்தென்றல் ம.யேசுதாஸ், யோ.ஜெஸ்ரின் ஆகியோர் நடுவர்களாகக் கலந்து கொண்டு போட்டியாளர்களைத் தெரிவு செய்தனர்.

முதல் மூன்று இடங்களை யோ.றொக்சன், அ.றீட்மலா, நோ.ஜெராட் ஆகியோர் பெற்றுக்கொண்டுள்ளதுடன் மேலும் 5 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (52)

# மன்னாரில் பெய்து வரும் மழையால் 22656 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தில் கடந்த 12 நாட்களுக்கு மேலாக தொடர்ச்சியாகக் கடும்மழை பெய்து வரும் நிலையில் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிப்படைந்து வருவதுடன், பல குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மன்னாரில் கூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன், தாழ்வான நிலப்பரப்புடைய கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன.**

மன்னாரில் நேற்று அதிகாலை முதல் வீசி வரும் கடும் காற்றினால் மரங்கள் சரிந்து வீழ்ந்துள்ளன. மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர், மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மீள்குடியேறிய மக்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றனர். கண்ணிவெடிகள் அகற்றப்படாத பகுதிகளில் மழை நீர் தேங்கியுள்ளதால் பயணங்களை மேற்கொள்வதற்கு மக்கள் அஞ்சுகின்றனர்.

இதற்கிடையில் மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த நெற்பயிர்ச் செய்கைகளும் முற்றாகப் பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

மன்னாரில் இதுவரையில் 4,283 குடும்பங்களைச் சேர்ந்த 22,656 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உணவு வழங்குவது தொடர்பாக மன்னார் பிரதேச செயலர் திருமதி ஸ்ரான்லி டி மெல் தெரிவிக்கையில், மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுகளில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மூன்று நாட்களுக்குத் தேவையான உலர் உணவுகள் வழங்கப்பட்டுள்ளது.

அதில் நாளொன்றிற்கு சிறுவர்களுக்கு 50 ரூபாப் படியும், பெரியவர்களுக்கு 70 ரூபாப் படியும் உலர் உணவுகள் வழங்கப்பட்டுள்ளது.

உலர் உணவுகளைத் தொடர்ந்து ஐந்து தினங்களுக்கு வழங்க உயரதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளோம் என்றார்.

# வாழைப்பழத்தின் விலைகள் நீர்வேலிச் சந்தையில் வீழ்ச்சி

(யாழ். நிருபர்)

நீர்வேலி வாழைக்குலை விற்பனைச் சந்தையில் வாழைப்பழத்தின் விலைகள் திடீரெனச் சரிந்து காணப்படுகின்றது. இந்தச் சந்தைக்கு தினமும் வாழைக்குலைகள் பெருமளவில் வந்து சேர்கின்றன.

வாழைக்குலைகள் அதிகளவில் வந்து சேர்வதால் அதன் விலைகள் குறைவடைந்து காணப்படுகின்றன. வாழைக்குலைகளின் வீழ்ச்சியை அடுத்து வியாபாரிகள் கொழும்புக்கு ஏற்றுமதி செய்வதிலும் அதிக கவனம் செலுத்தியுள்ளனர். கதலிப்பழம் கிலோ 20 ரூபா முதல் 30 ரூபா வரை இந்தச் சந்தையில் விற்பனைக்குப் போவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (18)

# தொழில் முயற்சியாளருக்கு விருதுகள் வழங்கப்பட்டன

(வவுனியா)

வவுனியா மாவட்ட கைத்தொழில் விவசாய சம்மேளனமும் வர்த்தக கைத்தொழில் சம்மேளனமும் இணைந்து நடத்திய வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான தொழில் முயற்சியாளருக்கான 15 ஆவது ஆண்டு விருது வழங்கல் நிகழ்வு நேற்று முன்தினம் இரவு வவுனியா நகரசபை மண்டபத்தில் சமாதானத்திற்கான வர்த்தக ஒன்றியத்தின் தலைவர் கே.சி.சுவர்ணராஜ் தலைமையில் நடைபெற்றது.

வடக்கு கிழக்கிலிருந்து விண்ணப்பித்தவர்களில் சிறந்த தொழில் முயற்சியாளராக களுவாஞ்சிகுடி, கோண்டாவில், தோணிக்கல், தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

# பலன்தரும் நிலையில் புதிய இன பப்பாசிகள்

(மண்டைதீவு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கமநெகுமகிராம எழுச்சித்திட்டத்திற்கு அமைவாக விவசாய பிராந்திய யாழ். திணைக்களத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட பப்பாசி இனப் பயிர்கள் வளர்ந்து பயன்தரும் பருவத்தை எட்டியுள்ளதாக விவசாயப் பணிமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயரம் குறைந்த "சிவந்த பெண்" எனப்படும் இந்தக் குட்டை இனம் புதிய அறிமுகமாகும். இது நிலமட்டத்தில் இருந்து இரண்டு அல்லது மூன்று அடி உயரத்தில் கூட்ப் பூத்துவிடும்.

உள்ளுடன் சிவப்பாக இருக்கும் விதைகள் குறைவாக இருக்கும். இந்த இனம் மாவட்டத்தில் உள்ள ஊர்காவற்துறை, வேலணை ஆகிய தீவகப் பகுதிகள் உட்பட பத்துப் பிரதேச செயலர் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 425 பயனாளிகளுக்கு தலா 50 கன்றுகள் (நாற்றுக்கள்) வீதம் வழங்கப்பட்டிருந்தன.

53 சதுர ஏக்கர் விஸ்தீரணத்தில் பயிரிடப்பட்ட இந்தப் பயிருக்கு தலா $11^1/_2$ (11.5) கிலோ இரசாயனப் பசளைகளும் இனாமாக வழங்கப்பட்டு இருந்தன. இவற்றின் சந்தைப் பெறுமானத்தை அதிகரிப்பதற்காக முன்கூட்டியே எடுத்துச் செல்வதற்கான பிளாஸ்டிக் பெட்டிகளும் வழங்கப்பட்டு இருந்தன. இந்த வருட முதலாம் கலாண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த விவசாய மேம்பாட்டுத் திட்டம் பயன்தரும் நிலையை எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (23)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு சமைத்த உணவு வழங்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் பலத்த மழையினால் பாதிக்கப்பட்டுள்ள பொன்நகர் கிராமத்திலுள்ள 49 குடும்பங்களைச் சேர்ந்த 125 பேருக்கும் பன்னங்கண்டி பிரதேசத்திலுள்ள 110 குடும்பங்களைச் சேர்ந்த 402 பேருக்கும் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சமைத்த உணவுகளை கரைச்சிப் பிரதேச செயலகத்தின பணிப்புரைகளுக்கு அமைய கரைச்சி தெற்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தினால் வழங்கப்பட்டு வருவதாகவும் மக்கள் தொடர் மழையினால் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்ப முடியாத நிலை காணப்படுவதாகவும் கூட்டுறவுச்சங்க பொது முகாமையாளர் செ.பாலேந்திரன் தெரிவித்தார்.

இதைவிட பொன்நகர் கிராமத்திற்குச் செல்லும் வீதி மிகவும் மோசமடைந்துள்ளதுடன் நீர் தேங்கிக் காணப்படுவதால் மிகுந்த சிரமத்தின் மத்தியில் சென்றே இந்தச் சமைத்த உணவுகளை வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (28)

# ஊடறுத்துப் பாய்கின்ற கடல்நீரால் தீவுப் பகுதிப் போக்குவரவில் சிரமம்

(யாழ்ப்பாணம்)

கனமழை, கடுங்காற்று, கடற்கொந்தளிப்புக் காரணமாக நேற்றுக்காலை யாழ். பண்ணை வீதியூடான தீவுப்பகுதிகளுக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது.

யாழ். பண்ணை வீதியின் மேலாக கடல்நீர் ஊடறுத்துப் பாய்ந்ததின் விளைவாகவே இப்பகுதிகளுக்கு இடையேயான போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டிருந்தன.

தற்சமயம் நாட்டில் பெய்து வருகின்ற தொடர் கனமழைப் பொழிவு காரணமாக இவ்வீதி கடுமையாகச் சேதமடைந்துள்ளது. இந்நிலையில் நேற்றுக் காலை முதல் இப்பகுதியில் கடும் காற்றுடன் கடற்கொந்தளிப்பு ஏற்பட்டு கனமழை பெய்தது. இதன்போது இவ்வீதியின் தாழ்வான பகுதிகளின் ஊடாக கடல்நீர் ஊடறுத்துப் பாய்ந்து சென்றவண்ணமிருந்தது. இதனை அடுத்து இவ்வீதியூடான போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக இவ்வீதியூடாகப் பயணித்த பயணிகள் பலர் பயணத்தைக் கைவிட்டு கால்நடையாக தமது பகுதிகளுக்கு திரும்பினர். சிலர் பயணத்தைத் தொடர்ந்தனர்.

துவிச்சக்கர வண்டிகள், உந்துருளிகள், ஓட்டோ என்பனவும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் தமது பயணத்தைத் தொடர்ந்தன. மேலும் இலங்கைப் போக்குவரத்துச் சேவை பஸ்வண்டிகளும் தமது சேவையை மிகுந்த சிரமத்தின் மத்தியில் மேற்கொண்டன.

இதேவேளை மண்டைதீவுச் சந்திக்கும் மண்டைதீவு வழிப் பிள்ளையார் கோவிலுக்கும் இடைப்பட்ட பகுதியிலும் இவ்வாறாகத் தொடர்ந்து கடல்நீர் ஊடறுத்துப் பாய்ந்தவண்ணமுள்ளது.

இவ்வாறாக நீண்ட நாட்களாக கடல்நீர் இப்பகுதி களினூடாக ஊடறுத்துப் பாய்ந்து செல்லும் பட்சத்தில் இப்பகுதிகளுக்கும் யாழ். நகருக்கும் இடையேயான போக்குவரத்துக்கள் முற்றாகத் தடைப்படும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது. (பா)

# சல்பீனியா பூண்டுகள் அகற்றல் மூன்றிலொரு பகுதியே வெற்றி

(கொக்குவில்)

யாழ். புல்லுக்குளத்தில் பெருகியுள்ள சல்பீனியாப் பூண்டுகளை அகற்ற கடந்த இரு வாரங்களுக்கும் மேலாக யாழ். மாநகர சபை ஊழியர்கள் நடத்தி வருகின்ற போராட்டத்தில் மூன்றில் ஒரு பகுதியை அவர்கள் வென்றெடுத்துள்ளனர்.

அதேவேளை வெளியில் எடுத்துப் போடப்படுகின்ற பூண்டுகளையும் வாகனங்களில் உடனுக்குடன் எடுத்துச் செல்கின்ற பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மிகவும் வேகமாக ஒரு பூண்டு ஒரே நாளில் மேலும் மூன்று, நான்கு பூண்டுகளைத் தோற்றுவித்து விடும் சாத்தியம் உள்ளதால், பத்துக்கும் மேற்பட்ட ஊழியர்களை அகற்றும் பணியில் ஈடுபடுத்தியும் இதுவரை முற்றாக அழிக்க முடியாமல் இருப்பதாகவும் யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மேலும் இப்பூண்டு வகை நிலத்தில் வேரூன்றாமல் தண்ணீரில் வேர்விட்டேவளர்வதாகவும் அவர் குறிப்பிட்டார். (68)



தற்போது பெய்து வரும் மழையை அடுத்து காரைநகர் பிரதான வீதியில் உள்ள வாய்க்கால்களை தபால் ஊழியர்கள் துப்புரவு செய்வதையும், காரைநகர் பிரதேச சபைக்கு முன்னால் உள்ள வீதியில் நீர்தேங்கி நிற்பதையும் காணலாம். (50)

# ஆழ்கடல் மீன்பிடிக்கு அனுமதி மறுப்பு பட்டினியுடன் வாழும் கல்லாறு மக்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் கல்லாறு கிராமத்தில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட 267 குடும்பங்கள் எவ்வித தொழிலும் இல்லாமையால் பட்டினிச் சாவை எதிர்நோக்கும் நிலையில் உள்ளன.

கடந்த மே மாதம் 20ஆம் திகதி கல்லாறு கிராமத்தைச் சேர்ந்த 167 நிரந்தர குடும்பங்கள் குடியேற்றப்பட்டனர். அதனைத் தொடர்ந்து தற்காலிகமாகக் குடியேற்றப்பட்ட 100 குடும்பங்களுக்கு கால் ஏக்கர் காணியும் தற்காலிக வீடுகளும் வழங்கப்பட்டன. வீடுகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவர்களுக்கு வழங்கப்பட்டுவந்த உலக உணவுத் திட்ட நிவாரணமும் 6 மாதம் முடிந்த நிலையில் நிறுத்தப்பட்டதால் எவ்வித தொழிலும் இல்லாததாலும் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ளனர்.

சுனாமியின் போது மனைவியையும் மூன்று பிள்ளைகளையும் பறிகொடுத்த ஒரு பிள்ளையுடன் வாழ்ந்து வந்த சிங்கராசா அருளப்பு (வயது 60) என்ற வயோதிபர் பசிக்கொடுமை தாங்கமாட்டாத நிலையில் சுண்டிக்குளம் கடல் நீரேரியில் மீன் பிடிக்கச் சென்ற வேளை கட்டுமரம் கவிழ்ந்து மரணமான சம்பவமும் இப் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

தமக்குக் கடற்தொழிலைத் தவிர வேறு எந்தத் தொழிலும் செய்யத் தெரியாத காரணத்தினால் சுண்டிக்குளம்,பேப்பாரப்பிட்டிப் பகுதி பெருங்கடலில் தொழில் செய்யப் படைத்தரப்பினரிடம் அனுமதிகேட்டும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இக்கிராம மக்கள் சுண்டிக்குளம் கடல் நீரேரியில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கடற்றொழில் செய்வதாகவும் தாம் பிடிக்கும் மீன் நாளாந்த உணவுத் தேவைக்கே போதுமானதாக இருப்பதாகவும், ஆழ் கடலில் தொழில் செய்ய அனுமதிப்பதன் மூலமே வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியுமெனவும் இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரியநடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (70)

# நெல்லுக்கு பசளை இடமுடியாமல் தொடர்ந்து கொட்டுகிறது மழை

(அரியாலை)

தற்போது பெய்துவரும் தொடர் மழையால் வயல் வரம்புகள் நீரால் மூடப்பட்டுள்ளன. பல இடங்களில் வரம்புகளில் உடைப்பெடுத்துள்ளதாக குடாநாட்டு விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இதனால் உரிய நேரத்தில் ரசாயன உரங்களை நெற்பயிர்களுக்கு இடமுடியாது உள்ளதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இடப்படும் ரசாயனப் பசளைகள் கழுவுப்பட்டு வழிந்தோடி விடுவதாகத் தெரிவிக்கும் அவர்கள் இதனால் விளைச்சல் பாதிக்கப்படக் கூடிய நிலை இருப்பதாகவும் "சப்பட்டை" "சாவி" "அரைவயிறன்" நெல்வகைக் குறைபாடுகள் ''பொஸ்பேற்'', ''பொட்டாசு''குறைவால் ஏற்படுமென அஞ்சுகின்றனர். பயிர்கள் வரப்பை மிதந்து காணப்படுவதால் குருத்தழுகல் (குருத்துகக்குதல்) அவதானிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி,தென்மராட்சி அரியாலை மற்றும் மண்டைதீவுப் பகுதிகளில் உள்ள விவசாயிகளே இவ்வாறு தெரிவித்துள்ளனர். (23)

# பழுதடைந்து காணப்படும் வீதியிலுள்ள மின்குமிழ்கள்

(யாழ்.நிருபர்)

யாழ்.நகரிலும் அதனை அண்டிய புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள பிரதான வீதிளில் உள்ள மின்சார ரியூப் லைட்டுக்கள் மற்றும் வீதி விளக்குகள் சில பழுதடைந்து காணப்படுகின்றன.

இந்த வீதி விளக்குகள் மழை நீர் பட்டதாலேயே பழுதடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. வீதி விளக்குகள் பழுதடைந்ததால் வீதிகள் சில இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன.

தற்போது பெய்து வரும் மழையினாலும் வீதிகள் சேதப்பட்டிருப்பதாலும் இரவில் பயணம் செய்யும் மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர். (18)

# அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பிராந்திய சேகரிப்பு நிலையம்,யாழ்ப்பாணம் - 11 இற்குட்பட்ட வலிகாமம் கல்வி வலயம்,வடமராட்சி கல்வி வலயம்,கோப்பாய் கல்விக்கோட்டம் ஆகிய வற்றில் க.பொ.த.சாதாரணதர பரீட்சைக் கடமையில் ஈடுபடும் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் புதன் கிழமை மு.பகல் 9.30 மணிக்கு யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும்.

பரீட்சைக் கடமைக்கு நியமிக்கப்பட்ட இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள்,உதவி இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள் உதவி மேற்பார்வையாளர்களை தவறாது உரிய நேரத்திற்கு இக்கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.



மக்கள் வங்கியின் கடன் வழங்கல் தொடர்பான கூட்டம் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையமண்டபத்தில் நடைபெற்றபோது, மத்திய வங்கியின் மாகாண உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீதரனுக்கு கல்வியங்காடு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் நா.சுந்தரலிங்கம் மலர்மாலை அணிவித்து வரவேற்பதைக் காணலாம். (08)

# வீதிகளை குறுக்கறுத்து பாயும் வெள்ளம் போக்குவரவில் சிரமப்படும் வன்னி மக்கள்

(கிளிநொச்சி)

தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் வன்னியிலுள்ள பெரும்பாலான வீதிகளினூடான போக்குவரவு முற்றாகப் பாதிப்படைந்துள்ளது.

தொடர்ச்சியாகப் பெய்யும் மழையால் வன்னிப் பகுதியிலுள்ள குளங்கள் நிரம்பி வான் பாய்கின்றன இதனால் வீதிகளைக்குறுக்கறுத்துப் பாய்ந்தோடுகிறது வெள்ளம். இதனால் மக்கள் போக்குவரத்திற்கு பெரும் கஷ்ரங்களை அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பாக அம்பாள்குளம் பகுதியிலிருந்து கனகபுரம் பகுதிக்குச் செல்லும் வீதிக்கு மேலாக வெள்ளம் பாய்கிறது இதனால் அம்பாள்குளம் பகுதியிலுள்ள பொதுச்சந்தைக்கு செல்லும் மக்கள் வெள்ளத்தினூடாகவே செல்ல வேண்டியுள்ளது.

அதேபோன்று தட்டுவன் கொட்டிக் கிராமம் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளதால் அந்தக் கிராமத்துக்கான போக்குவரத்து தொடர்பும் துண்டிக்கப்பட்டுள்ளது. மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவு அரச அதிபருடன் இதுதொடர்பாக,கலந்துரையாடியதை அடுத்து அரச அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க,அப்பகுதி இராணுவத்தினர்,பொது மக்களின் போக்கு வரவுக்கு உதவிவருகின்றனர். குறித்த கிராமத்திற்குச் செல்லும், மக்களை படகுகள் மூலம் ஏற்றி, இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதே போன்றே கல்மடுக்குளம் அணை இல்லாத காரணத்தால் வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்கிறது. இதனால் கண்டாவளை, தர்மபுரம்,உட்பட்ட மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

தற்போது மூன்றாம் தவணைக்கான பரீட்சைகள் பாடசாலைகளில் நடைபெற்றுவருவதனால் மாணவர்கள் பல்வேறு சிரமத்தின் மத்தியிலேயே பரீட்சைக்கும் சென்று வருகின்றனர். (28)

# ஒளிவிழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யா/புங்குடுதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலயத்தின் ஒளிவிழா நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை பத்து மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில், கிறிஸ்தவமன்றப்பொறுப்பாசிரியர் திருமதி பி.எச்.சாள்ஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் புங்குடுதீவு பங்குத்தந்தை வண.பிதா லீயோ ஆம்ஸ்ரோங் பிரதம விருந்தினராகவும், தீவகவலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தி.யோன் குயின்ரஸ் சிறப்பு விருந்தினராகவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் வை.செல்வராசா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாணவர்களின் பேச்சு,தனிப்பாடல், குழுப்பாடல், கோலாட்டம்,நாடகம் போன்ற கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

# தற்காலிகமாக அமைக்கப்பட்ட பாதையும் வெள்ள நீர் அதிகரிப்பால் சேதமடைந்தது

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் ஐந்துகண் மதவடிப் பாலம் திருத்த வேலை மேற்கொள்ளப்பட்ட போதிலும் தற்காலிகமான போக்குவரத்திற்கென பாதையொன்று அமைக்கப்பட்டது. எனினும் தற்போது பெய்து வரும் அடை மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமடைந்துள்ளது.

இந்தப் பாலத்திற்கென வைக்கப்பட்ட சீமெந்துக் குழாய்கள்,நீர்வழிந்தோடப் போதுமானதாக இல்லாத காரணத்தால், வெள்ளம் நிரம்பி வழியும் நிலை காணப்பட்டது. இதனையடுத்து பாதையின் சிறு பகுதியை அகற்றி இரும்புக் கேடர்கள்,தகரம்,மண் மூடைகள் கொண்டு அடுக்கப்பட்டுள்ளது.



எனினும் கேடர்கள்,பாரத்தைத் தாங்க முடியாமல் வளைகின்றது. இது தொடர்பாக அறிந்த அப்பகுதி ராணுவப் பொறுப்பதிகாரி நேரடியாக வருகை தந்து நிலைமைகளைப் பார்வையிட்டார். இதன்போது அங்கிருந்தவர்கள் தற்காலிக பாதையின் தேவை மற்றும் நீர் தேங்குவதால் ஏற்படக்கூடிய குடிப்பெயர்வு குறித்து எடுத்துக்கூறினர். இதனைக் கேட்டறிந்த அதிகாரி, குறித்த பகுதிக்கு அளவானதான தற்காலிக பாலம் இராணுவத்தினரிடம் இருந்தால் அதனைப் பெற்றுத்தருவதாகக் கூறினார். (54)

## இன்றைய பலன்

06.12.2010 திங்கட்கிழமை]

### பஞ்சாங்கக் குறிப்புகள்

விகிர்தி கார்த்திகை 20
இராகு காலம் 7.47-9.17 சுபநேரம் 12.17-1.47
பிரதமை மு.இ 11.25 கேட்டை மு.இ 7.16 சித்தம்
சோமவார விரதம்.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்: வீண்வார்த்தைபேசல்,நண்பர் விரோதம்,குடும்பத்தில் பிரச்சினை.

ரிஷபம்: பதவி உயர்வு,பாராட்டப்படல்,கௌரவிப்பு.

மிதுனம்: நண்பர்சேர்க்கை, விருந்துணவு,சுபச்செலவு அதிகரிப்பு.

கடகம்: பொருட்சேர்க்கை, இனசன உதவி,பெரியோர் உதவி.

சிம்மம்: தெய்வவழிபாடு,தானதர்ம விருப்பம்,நண்பருக்குதவி.

கன்னி :- திருடர்பயம்,பொருள் இழப்பு,அவமதிக்கப்படல்.

துலாம் :- முயற்சியில் ஊக்கம், பணம்தேடும் ஆசை,பொருட் சேர்க்கை.

விருச்சிகம்:- காரிய சித்தி,தனச் சேர்க்கை,செய்தியில் இலாபம்.

தனுசு :- அவமதிக்கப்படல், வெறுப்பு,மனக்கலக்கம்.

மகரம் : நினைத்ததைச் சாதித்தல்,பொருள் வரவு,பாராட்டு.

கும்பம் :- தெய்வவழிபாடு, மகிழ்ச்சி,தொழிலில் ஆர்வம்.

மீனம்:- புதிய முயற்சியில் ஈடுபாடு, பொருட்சேர்க்கை,நண்பர் உதவி.

-ஆதினி-

# ஜனாதிபதியின் உரை இரத்து தொடர்பாக வெளியுறவு அமைச்சு உறுதியான நிலையை கைக்கொள்ள வேண்டுமென அறிவுறுத்து

**ஜனாதிபதியின் ஒக்ஸ்போர்ட் உரை ரத்துச்செய்யப்பட்ட சர்ச்சைக்குரிய முடிவானது, இலங்கையின் வெளியுறவு அமைச்சு, தமது தொலைத்தொடர்பு கட்டளை மற்றும் திட்டங்களில் உறுதியான நிலைப்பாட்டைக் கைக் கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்துவதாக அமைந்துள்ளதென சர்வதேச பயங்கரவாதத்துறை நிபுணர் ரொஹான் குணரத்ன தெரிவித்தார்.**

இது இலங்கை அரசாங்கத்துக்கு நல்ல பாடம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

இலங்கையில் என்ன நடந்தது என்பதைக் கூறுவதற்கு, உரிய தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்வது அவசியமாகிறது.

இலங்கையில் போரில் கொல்லப்பட்ட பொதுமக்களுக்கும் ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கில் அமெரிக்க மற்றும் பிரித்தானியர்களால் கொல்லப்பட்ட பொதுமக்களுக்கும் இடையிலான வீதத்தைச் சுட்டிக்காட்டவேண்டியது அவசியமாகும்.

இரண்டாவதாக, நோர்வேயில் இருந்து இயங்கும் நெடியவன் அமைப்பின் நடவடிக்கைகளை முடக்கவேண்டும்.

மூன்றாவதாக, அரசசார்பற்ற அமைப்புகள் தொடர்பில், இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஏனெனில் புலிகள், அரச சார்பற்ற அமைப்புகள், மேற்கத்தைய நாடுகளின் அரச சார்பற்ற அமைப்புகளின் ஊடாக எழுச்சிபெற முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

உலகத் தமிழர் பேரவையும் இந்த அரச சார்பற்ற அமைப்புகளுடன் நெருங்கிய உறவைக் கொண்டுள்ளது.

பிரித்தானிய தலைவர்கள் இலங்கைக்கு வரும்போது, அங்கு சிலவேளையில் சங்கடங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

அவர்கள், இன்னல்களுடன் பிரித்தானியாவுக்குத் திரும்பும் போது, அவர்களை அணுகும் புலிகள், அவர்களை நண்பர்களாக மாற்றிக்கொள்கின்றனர். பின்னர் அவர்களுக்கு ஊடாக இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் ரொஹான் குணரத்ன குறிப்பிட்டுள்ளார்.



# நாளுக்குநாள் மோசமடையும் பொன்சேகாவின் உடல்நிலை

## லக்ஷ்மன் கிரியெல்ல கவலை

(கொழும்பு)

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகாவின் உடல்நிலை நாளுக்குநாள் மோசமடைந்து செல்வதாக ஐ.தே.கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.



ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, பி.ஹரிசன் மற்றும் லக்ஸ்மன் கிரியெல்ல ஆகியோர் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று சரத்பொன்சேகாவைப் பார்வையிட்ட பின்னரேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

சிறைச்சாலையிலுள்ள சரத்பொன்சேகாவிற்குத் தேவையான மருத்துவ வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சரத்பொன்சேகாவின் உடல்நிலை திருப்தி அடையும் வகையில் காணப்படவில்லை. எனவே அவரை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்தார்.

# நிதிவளம் கொண்ட நிறுவனமாக இலங்கை மின்சாரசபை மாற்றப்படும்

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை மின்சார சபை இதுவரை சபைக்கு ஏற்பட்ட நஷ்டத்தைப் படிப்படியாகக் குறைப்பதுடன் அடுத்துவரும் ஆண்டுகளில் மின்சார விநியோகத்தை சீராக மேற்கொள்ளவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிபொருள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்-

துடிப்பும் நிலையான நிதி வளமும் கொண்ட நிறுவனமாக அடுத்து ஐந்து ஆண்டுகளில் இலங்கை மின்சாரசபை மாற்றப்படும். மின்சார சபையின் வருமானம் 130 மில்லியன் ரூபாவாக இருந்த போதிலும் அதன் தற்போதைய நஷ்டம் 29 மில்லியன் ரூபாவாக உள்ளது.

இதன் காரணமாக சபையில் நிலவிய நெருக்கடி காரணமாக மின்சார விநியோகத்திற்கான கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய நிலைக்குத்தான் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் இதன் போது தெரிவித்தார்.

எனினும் கட்டணத்தை 8 வீதமாக அதிகரித்ததால் 75 வீதமான பாவனையாளர்கள் பாதிக்கப்படமாட்டார்கள். வீட்டுகளுக்குத் தேவையான மின்சாரத்தைப் பெறும் இவர்கள் 90 அலகுகளுக்கு மேல் பாவிப்பதில்லை.

மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு 2005 ஆம் ஆண்டுக்கு முன் இருந்த அரசுகளே காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐ.தே.க.வின் தலைமைத்துவத்தில் மாற்றம் எதுவும் ஏற்படமாட்டாது

## என்கிறார் லக்ஷ்மன் செனிவிரட்ன



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படுமெனத் தான் நினைக்கவில்லையென, அந்தக் கட்சியின் முன்னாள் பிரதிப் பொதுச் செயலாளரும் தற்போது அரசாங்கத்தில் இணைந்து அமைச்சராக உள்ளவருமான லக்ஷ்மன் செனி விரட்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் தலைவராகவுள்ள ரணில் விக்கிரமசிங்க அந்தப் பதவியிலிருந்து விலகுவாரென எவராவது நினைத்தால், அது தவறானதாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி முன்னோக்கிச் செல்ல வேண்டுமெனில் அந்தக் கட்சியில் ஆக்கபூர்வமான மாற்றங்கள் ஏற்படவேண்டும்.

எவ்வாறாயினும், கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றங்கள் ஏற்பட்டாலும்கூட மீண்டும் அந்தக் கட்சியில் இணைவதென்ற பேச்சுக்கே இடமில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

# வடபகுதிக்கான நீர் விநியோகம் ஆசிய அபிவிருத்தி வங்கி கடனுதவி

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடபகுதியில் நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாடுகளுக்காக இலங்கை அரசாங்கத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 90 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்கியுள்ளது.

அரசாங்கத்தினால் வட பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்ற அபிவிருத்தித் திட்டத்தின் கீழேயே இக்கடன் வழங்கப்படுவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

இவ்வடிப்படையில், இலங்கை அரசாங்கத்தினால் வட பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்ற அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாடுகளுக்காக இக்கடன் வழங்கப்படுவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பிட்டுள்ளது.

வட பகுதியில் நீர்வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாடுகளுக்காக மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பூர்த்தியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி மஹிந்தவைக் கைது செய்வதற்கு பிரிட்டன் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததாம்

## திவயின பத்திரிகை தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரித்தானியா சென்றிருந்த சந்தர்ப்பத்தில் போர்க் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவரைக் கைது செய்வதற்காக பிரித்தானிய ஆரம்ப நீதிமன்றம் ஒன்று உத்தரவு பிறப்பித்திருந்ததாக திவயின நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

புலம்பெயர் தமிழர்களின் கோரிக்கையின் அடிப்படையில் பிரிட்டனின் ஆரம்ப நீதிமன்றம் இந்த உத்தரவைக் கடந்த 2 ஆம் திகதி பிறப்பித்தது.

மக்கள் வழங்கிய வாக்குகளால் அதிகாரத்திற்கு வந்துள்ள அரச தலைவர் ஒருவரை, வெளிநாடொன்றில் கைது செய்வதற்காக வெளிநாட்டு நீதிமன்றம் ஒன்று உத்தரவு பிறப்பித்தது உலக வரலாற்றில் இது முதல் முறையாகும்.

முப்பது வருடங்களாக இலங்கையில் செயற்பட்ட விடுதலைப்புலிகளின் பயங்கரவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துச், சகல மக்களுக்கும் சுதந்திரத்தை வென்று கொடுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சுதந்திரம் பறிபோயிருப்பது இந்தச் சம்பவத்தின் மூலம் தெளிவாக உறுதியாகியிருப்பதாக பிரித்தானியாவில் வாழும் சிங்களவர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானிய சட்டத்தின்படி, 72 மணித்தியாலங்களுக்கு செயற்படுத்தப்படும் வகையில் புலம்பெயர் தமிழர்கள் இந்த நீதிமன்ற உத்தரவைப் பெற்றுக் கொண்டுள்ளனர் எனவும், அவர்கள் கூறியுள்ளனர்.



பிரித்தானியாவில் இயங்கும் நோர்வே சட்ட நிறுவனத்தின் ஆலோசனைக்கு, அமைய புலம்பெயர் தமிழர்கள் மிகவும் திட்டமிட்ட வகையில் இந்த நீதிமன்ற உத்தரவைப் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

# வெளிவாரிப் பரீட்சை 18ஆம் திகதி ஆரம்பம்

(ரூபது நிருபர்)

தென்னிலங்கைப் பல்கலைக்கழகத்தின் 2009-2010 ஆம் ஆண்டுக்கான வெளிவாரிப் பரீட்சைகள் எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகி 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதிவரை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

2009- 2010 ஆம் ஆண்டுக்கான கலைமாணி, வியாபார நிர்வாக மாணி, வணிகமாணிப் பொதுப்பட்டங்களுக்கான 2 ஆம், 3 ஆம் வருட வெளிவாரிப் பட்டப்பரீட்சைகளே நடைபெறவுள்ளதாக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எம்.ஐ.நெவபர் தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கைப் பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நடைபெறவுள்ள இப்பரீட்சைகளுக்கு விண்ணப்பித்திருந்த பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் கிரிக்கெட் குறித்து வேதனை அடைகிறார் முஷாரப்

(லண்டன்)

பாகிஸ்தான் கிரிக்கெட்டின் நிலைமை மனவேதனை அளிப்பதாக உள்ளதென பாகிஸ்தான் முன்னாள் அதிபர் முஷாரப் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், உலகக் கிண்ணப் போட்டித் தொடர் நடைபெறவுள்ள நாள் நெருங்கிக்கொண்டிருக்கும் நிலையில் பாகிஸ்தான் அணியை இன்னும் சீர்படுத்த முடியாதளவுக்கு பிரச்சினைகள் வந்து கொண்டிருக்கிறது. பாகிஸ்தான் கிரிக்கெட்டின் நிலைமை மனவேதனை அளிப்பதாகவுள்ளது. ஒவ்வொரு நாளும் புதுப்புதுப் பிரச்சினைகள், பாகிஸ்தான் கிரிக்கெட்டை ஆட்டிப் படைத்து வருகின்றது. இதிலிருந்து விரைவில் மீள வேண்டும். உலகக் கிண்ணத்திற்கான அணியை சரிவர தெரிவுசெய்ய வேண்டும். இந்திய கிரிக்கெட்டின் வளர்ச்சி ஆச்சர்யம் அளிக்கும் வகையில் உள்ளது.

அத்துடன் உலகின் கவர்ச்சிகரமான



மற்றும் உற்சாகமான கிரிக்கெட் வீரர் என்றால் அது டோனிதான். ஒரு முறை அவரது நீளமான தலைமுடி குறித்து அவரைப் பாராட்டினேன். தற்போது அவர் தலைமுடியை கட் செய்து குறைத்துக் கொண்டுள்ளார். தற்போதும் பார்ப்பதற்கு கவர்ச்சிகரமாகவே உள்ளார் என்றார்.

# தென்னாபிரிக்க அணி அறிவிப்பு

(ஜொகனஸ்பேர்க்)

இந்திய அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டிக்கான தென்னாபிரிக்க வீரர்களின் பெயர்கள் அதன் கிரிக்கெட் சபையால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்திய- தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி வரும் 16ஆம் திகதி செஞ்சூரியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கான தென்னாபிரிக்க அணி விபரமே அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து தென்னாபிரிக்க தெரிவுக்குழுத் தலைவர் ஆண்ட்ரூ ஹட்சன் குறிப்பிடுகையில், பாகிஸ்தான் அணிக்கெதிரான தொடரில் காயமடைந்த அணித் தலைவர் ஸ்மித், முன்னணித் துடுப்பாட்ட வீரர் ஹசிம் அம்லா ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர். முதல் டெஸ்ட் போட்டி ஆரம்பமாவ



தற்கு முன்னர் இருவரும் உடற் தகுதி பெறுவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது என்றார்.

அணி விபரம் வருமாறு: ஸ்மித் (அணித் தலைவர்), ஹசிம் அம்லா, ஜோகன் போத்தா, மார்க் பௌச்சர், டிவில்லியர்ஸ், டுமினி, போல் ஹாரிஸ், மெக்லரன், கலிஸ், மோர்னே மோர்க்கில், பார்னல், அல்விரோ பீட்டர்சன், பிறின்ஸ், ஸ்டெயின், சோட்சோப்.




## டெஸ்ட் தொடர் சமநிலையில் நிறைவு

(கொழும்பு)

மேற்கிந்தியத்தீவுகள் - இலங்கை அணிகளுக்கிடையில் கண்டி பல்லேகல விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி மழை காரணமாக கைவிடப் பட்டது.

நேற்றைய இறுதி நாள் ஆட்டமும், மூன்றாம் நாள் ஆட்டமும் முற்றாக விளை யாடப்பட முடியாத நிலையில், ஏனைய நாட்களில் மொத்தம் 103 ஓவர்களே வீசப் பட்டன. இந்நிலையில் மூன்று போட்டி களைக் கொண்ட டெஸ்ட் தொடர் வெற்றி - தோல்வியற்ற நிலையில் முடிவடைந் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 2022 உலகக் கால்பந்து தொடரை வெற்றிகரமாக நடத்தி முடிப்போம்

## கட்டார் கால்பந்தாட்ட சம்மேளனம் நம்பிக்கை

qatar 2022

(டோகா)

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமான, உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரை வெற்றிகரமாக நடத்தி முடிப்போம் என கட்டார் கால்பந்தாட்ட சம்மேளனம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டித் தொடரை நடாத்துவதற்கான அனுமதியை மத்திய கிழக்கு நாடான கட்டார் பெற்றுள்ளதைத் தொடர்ந்து, அதன் கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டது.

அதில் மேலும் தெரிய வருகையில், 2022ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியை நடாத்தும் உரிமையை நாம் பெற்றிருப்பது எமது நாட்டுக்கே பெரிமைக்குரிய விடயமாகும். இந்தப் போட்டியில், தென்கொரியா, அவுஸ்ரேலியா, ஜப்பான் போன்ற முக்கியமான நாடுகள் போட்டியிட்டன. இருந்தபோதிலும் நாங்கள் அதில் வெற்றிபெற்று, போட்டியை நடாத்தும் உரிமையைப் பெற்றுள்ளோம்.

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் எந்த நம்பிக்கையில் இந்த உரிமையை எம்மிடம் கையளித்ததோ, அதைவிடப் பல மடங்கு நம்பிக்கையுடன் இந்தப் போட்டித் தொடரை நடாத்தி முடிப்போம் என்ற நம்பிக்கை எம்மிடம் உள்ளது.

2022ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டித் தொடரை வெற்றிகரமாக, இது வரையில் யாரும் நடாத்திடாத வகையில் நடாத்தி எமது நாட்டிற்கும், எமது மக்களுக்கும் புகழைத் தேடித் தருவோம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டது.

# அடிலெய்ட் டெஸ்டில் இங்கிலாந்து ஆதிக்கம்



அவுஸ்ரேலிய அணிக்கெதிரான அடிலெய்ட் டெஸ்டில் இங்கிலாந்து அணியின் ஆதிக்கம் தொடர்ந்து வண்ணமுள்ளது. அவுஸ்ரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் தொடரின் இரண்டாவது போட்டி கடந்த 3ஆம் திகதி அடிலெய்ட் மைதானத்தில் ஆரம்பமானது.

இதில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 317 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தை இங்கிலாந்து அணி தொடர்ந்தது. மிகவும் சிறப்பாக ஆடிய இங்கிலாந்து அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் மழையால் நிறுத்தப்பட்ட வேளை, நான்கு விக்கெட்டுக்களை இழந்து 551 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் கெவின் பீற்றர்சன் 213, இயன் பெல் 41 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளனர். மற்றும் குக் 148, கொலிங்வூட் 42 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ஹாரிஸ் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். தற்போது இங்கிலாந்து அணி ஆறு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 306 ஓட்டங்களினால் முன்னிலையில் உள்ளது. இதேவேளை, அவுஸ்ரேலிய அணி அதன் முதல் இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை தெரிந்ததே.

# தொடரை வெல்ல உதவிய சதம்

## கௌதம் கம்பீர்

(வதோதரா)



எல்லா சதங்களும் முக்கிய மானதுதான். அதிலும் தொடரை வெல்வதற்கு உதவியிருக்கிற இந்தச் சதத்தைச் சிறப்பு வாய்ந்ததாகக் கருதுகிறேன் என இந்திய அணித் தலைவர் கௌதம் கம்பீர் தெரிவித்தார்.

நியூசிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது போட்டியில் வெற்றிபெற்ற பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த நாலைந்து மாதங்களில் சில ஆட்டங்களில் எனது ஓட்ட எண்ணிக்கை குறைவாக இருந்தது. இத்தகைய நிலையில் மீண்டும் ஓட்டங்கள் குவித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்த ஆட்டத்தை நாங்கள் மிகவும் முக்கியமானதாகக் கருதினோம். ஏனெனில், இந்த ஆட்டத்தின் மூலம் தொடரை வெல்வதற்கான ஒரு நம்பிக்கையை நியூசிலாந்து அணிக்குக் கொடுத்துவிடக்கூடாது என்று விரும்பினோம். அதன்படியே அந்த அணிக்கு வாய்ப்பு அளிக்காமல் தொடரைக் கைப்பற்றிவிட்டோம்.

சகீர்கான் மிகவும் திறமையான பந்து வீச்சாளர். இப்போது உலகின் சிறந்த இடதுகை வேகப்பந்து வீச்சாளர் இவர்தான். இவர் அணியில் இருப்பது எப்போதும் கூடுதல் பலமாகும்.

ஒரு வீரராக அல்லது தலைவராக நான் எனது 100 சதவீத திறமையை அணிக்கு அளிக்கிறேன். தலைமைப் பதவி எனது துடுப்பாட்டத்தை எந்த வகையிலும் பாதிக்கவில்லை.

தொடரை 5-0 என்ற நிலையில் வெல்ல வேண்டும் என்பது எமது இலக்கல்ல. ஒவ்வொரு ஆட்டத்திலும் கவனம் செலுத்தி வெற்றிபெறவே விரும்புகிறோம். அதன்படி நான்காவது போட்டியில் எப்படி வெற்றிபெறலாம் என்பதே தற்போதைய எமது சிந்தனையாகும் என்றார்.

# தோல்வியால் நெருக்கடியல்ல

## விட்டோரி

(வதோதரா)



தொடர் தோல்வியின் மூலம் எங்களுக்கு எந்த நெருக்கடியும் இருப்பதாக நினைக்கவில்லை. தொடர்ந்து போராடுவோம் என நியூசிலாந்து அணித் தலைவர் விட்டோரி தெரிவித்தார்.

வதோதரா விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நிறைவடைந்த இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது போட்டியில் தோல்வியுற்று தொடரை இழந்த பின் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாணயச் சுழற்சியில் வென்றது இந்தியாவுக்கு நல்ல அறிகுறி. மோசமான ஆடுகளச் சூழலில் நாங்கள் துடுப்பாட்டத்தை தொடங்க வேண்டி இருந்தது. ஆடுகளம் ஈரப்பதமாக இருந்ததால் தொடக்கத்தில் வேகப்பந்து வீச்சு எடுபட்டது. அதேசமயம் நன்கு சுழலவும் செய்தது. ஆனால், கிரிக்கெட்டில் இதெல்லாம் சகஜம் இதனை நாங்கள் சமாளித்துத்தான் ஆகவேண்டும். பிராங்ளினும், நதன் மெக்கலமும் அருமையாக விளையாடி எங்களுக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தனர்.

ஆனால், இந்திய அணி துடுப்பாட்டத்தைத் தொடங்கியபோது, ஆடுகளம் நன்கு காய்ந்து துடுப்பாட்டத்திற்குச் சாதகமாக மாறிவிட்டது. இதனை இந்திய துடுப்பாட்ட வீரர்கள் பயன்படுத்திக் கொண்டனர். 224 ஓட்டங்கள் என்பது ஒருபோதும் போதுமான ஓட்ட எண்ணிக்கை அல்ல. 250 ஓட்டங்கள் எடுத்திருந்தால் சவாலாக இருந்திருக்கும். மீண்டும் எங்களது பந்து வீச்சு மோசமாக அமைந்திருக்கிறது.

தொடர் தோல்வியின் மூலம் எங்களுக்கு எந்த நெருக்கடியும் இருப்பதாக நினைக்கவில்லை. தொடர்ந்து போராடுவோம். தொடக்க ஆட்டக்காரர்கள் வலுவான தொடக்கம் கொடுப்பது அவசியம். அடுத்த ஆட்டங்களில் இதனை எங்கள் அணி வீரர்கள் சரி செய்வார்கள் என்று நம்புகிறேன் என்றார்.

# விக்கிலீக்ஸ் இணையத்துக்கு பிரான்ஸ் தடை முடக்கப்படுகிறது அசான்ஜ்ஜின் கடவுச்சீட்டு



(பாரிஸ்)

அமெரிக்கத் தூதரகங்களின் ரகசிய அறிக்கைகளை அம்பலப்படுத்திப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள விக்கிலீக்ஸ் இணையத்தளத்துக்கு பிரான்ஸ் நாடும் தடை விதிக்க முடிவு செய்துள்ளது.

பிரான்ஸ் நாட்டில் உள்ள சரவர்களில் விக்கிலீக்ஸ் இணையத்தளத்தை முடக்குமாறு அந்நாட்டுத் தொழில்துறை அமைச்சர் எரிக் பெஸன் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

விக்கிலீக்ஸ் வெளியிட்ட தகவல்களால் அமெரிக்காவுடனான தமது உறவு பாதிக்கப்படாது என்று பிரான்ஸ் அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை-

விக்கிலீக்ஸ் இணையதளத்தின் நிறுவுநர் ஜுலியன் அசான்ஜ்ஜின் கடவுச்சீட்டை ரத்துச் செய்வது குறித்து ஆராய்வதாக அவுஸ்ரேலிய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியத் தலைமை அரசு வழக்கறிஞர் ராபர்ட் மெக்லேலண்ட் இத்தகவலைத் தெரிவித்தார்.

அமெரிக்கச் சட்டங்களை ஜுலியன் அசான்ஜ் மீறியுள்ளதாக அந்நாட்டின் தலைமை அரசு வழக்கறிஞர் கூறியுள்ளதைக் கவனித்தோம். எனினும், ஜுலியன் அசான்ஜ் அவுஸ்ரேலியச் சட்டத்திற்கு விரோதமாகச் செயற்பட்டாரா என்பது குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். ஜுலியன் விவகாரத்தில் அமெரிக்காவுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கத் தயாராக உள்ளோம். அவரது கடவுச்சீட்டை ரத்துச் செய்யவும், நடவடிக்கை எடுப்போம். எனினும், சட்ட அமுலாக்கத்துறையின் முடிவின்படியே இது சாத்தியமாகும் என்றார் ராபர்ட் மெக்லேலண்ட்.

# விக்கிலீக்ஸ் இணையம் மீதான தடையை பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் நிராகரித்தது

(லாகூர்)

விக்கிலீக்ஸ் இணையத்தளத்திற்குத் தடைவிதிக்கக் கோரும் மனுவைப் பாகிஸ்தான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

170 நாடுகள் குறித்த ஆவணங்களை விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது. பாகிஸ்தான் மக்கள் உண்மைகளைத் தெரிந்துகொள்வதால் எதுவும் ஆகிவிடப்போவதில்லை என நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

வழக்கறிஞர் ஆரிஃப் கோண்டல் என்பவர் அந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார். அதை விசாரித்த லாகூர் உயர்நீதிமன்ற நீதிபதி அஜ்மத் சயீது, 21ஆம் நூற்றாண்டில் இதுபோன்ற விவகாரங்களில் மக்கள் உண்மைகளை அறிந்துகொள்ள வேண்டியது அவசியம் எனத் தெரிவித்தார்.

விக்கிலீக்ஸ் வெளியிட்ட ஆவணங்கள் முஸ்லிம் நாடுகளிடையே வேறுபாடுகளை ஏற்படுத்தியுள்ளதாகவும், பாகிஸ்தானில் குழப்பத்தை உண்டாக்கியுள்ளதாகவும் ஆரிஃப் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

# கண்ணிவெடிகளைத் தடை செய்யுங்கள் ஒபாமாவுக்கு ஆங்சான் சூகி கோரிக்கை

(வொஷிங்டன்)

கண்ணிவெடிகளைத் தடை செய்ய வேண்டுமென அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு மியன்மார் ஜனநாயக இயக்கத் தலைவி ஆங் சான் சூகி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஒபாமாவுக்கு சூகி உள்ளிட்ட நோபல் பரிசு வென்ற 16 பேர் கூட்டாக இணைந்து இக்கடிதத்தை எழுதியுள்ளனர்.

அதில் கண்ணிவெடிகளைத் தடை செய்யும் ஒப்பந்தத்தில் ஒபாமா கையெழுத்திட வேண்டும். ஏனெனில் கண்ணிவெடிகள் அப்பாவிகள் பலரின் உயிரைக் குடிப்பதுடன், பலரது வாழ்க்கையை முழுவதுமாக முடக்கிப் போட்டு விடுகிறது. எனவே இதுபோன்றவற்றை ஆயுதமாகப் பயன்படுத்தக் கூடாது என்று அதில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தில், 1997ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வென்ற ஜோடி வில்லியம்ஸ் உட்பட 16 பேர் கையெ



முத்திட்டுள்ளனர்.

கண்ணிவெடியைத் தடை செய்ய வேண்டுமென்று வில்லியம்ஸ், இயக்கம் ஒன்றை நடத்தி வருகிறார். முன்னதாக வீட்டுச் சிறையில் இருந்து விடுதலையான ஆங்சான் சூகிக்கு வில்லியம்ஸ் வாழ்த்துத் தெரிவித்தார்.

ஆங் சான் சூகிக்கு 1991 இல் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 2010 ஆம் ஆண்டுக்குரிய உலக அழகியாக இந்தியப் பெண்மணி தெரிவுசெய்யப்பட்டார்




(கோலாலம்பூர்)

வியட்நாமில் நடந்த மிஸ் ஏர்த் 2010 உலக அழகிப் போட்டியில், இந்தியாவின் நிக்கோல் பரியா முடி சூட்டப்பட்டார்.

வியட்நாமின் ஹோசிமின் நகரில் நடந்த இப்போட்டியின் இறுதிப் போட்டியில் மொத்தம் 17 பேர் பங்கேற்றனர். இறுதிச் சுற்றில் இவர்களில் நிக்கோல் பரியா வெற்றி பெற்றார்.

20 வயதே ஆகும் பரியா பெங்களூரைச் சேர்ந்தவர். பரியாவின் வெற்றி குறித்து அவரது தந்தை இயான் கூறுகையில், இந்தச் செய்தியைக் கேட்டதும் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளோம். ஆனால் பரியா வெல்வார் என்பதை ஏற்கனவே எதிர்பார்த்திருந்தோம் என்றார்.

மொத்தம் 84 அழகிகள் இப்போட்டியில் பங்கேற்றனர். இவர்களுக்கு நடத்தப்பட்ட பல் வேறு போட்டிகளின் இறுதியில், 17 பேர் இறுதிச் சுற்றுக்கு முன்னேறினர்.

மிஸ் ஏர்த் போட்டியில் மிஸ் கான்ஜெனிலிட்டியாக கௌதமாலா அழகி சூ எல்லன் காஸ்டென்டாவும், சிறந்த தேசிய உடை அழகியாக ஜப்பானின் மரினா கிஜிராவும், மிஸ் போட்டோஜெனிக்காக தாய்லாந்தின் வாட்ஸபோர்ன் வாட்டனகூன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

இந்த நிழ்ச்சியின் மூலம் வசூலான 100 மில்லியன் வியட்நாம் டாங் பணம் உள்ளூர் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அளிக்கப் போவதாக அறிவித்துள்ளனர் ஏற்பாட்டாளர்கள். மத்திய வியட்நாமில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த நிதி செலவிடப்படவுள்ளது.

சனிக்கிழமை இரவு நடைபெற்ற அட்டகாசமான இறுதிப் போட்டியின் போது பெல்லி நடனம் உள்ளிட்ட கண்கவர் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

மிஸ் வேர்ல்ட், மிஸ் யுனிவர்ஸ் பட்டங்களை இந்தியர்கள் பெருமளவில் வாங்கிக் குவித்திருந்தாலும், மிஸ் ஏர்த் பட்டத்தை வெல்வது இதுவே முதல் முறையாகும்.

# சவுதி அரேபிய உயர் அதிகாரிகளைக் கொலைசெய்ய அல்கொய்தா அமைப்பு திட்டம் தீட்டியுள்ளதாகத் தகவல்


சவூதி அரேபியாவிலுள்ள உயர் அதிகாரிகளைக் கொலை செய்வதற்கு அல்கொய்தா முயன்று வருவதாக வெளியாகியுள்ள தகவல் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சவூதி அரேபிய அரசாங்க நிறுவனங்களில் வேலை செய்து வரும் அதிகாரிகளுக்கு விஷம் கலந்த வாசனைத்திரவியங்களைப் பார்சல் மூலம் அன்பளிப்பு அனுப்புவது போல அனுப்பி, அவர்களைக் கொலை செய்ய அல்கொய்தா அமைப்பு முயற்சித்துள்ளதாக சவூதி உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அண்மையில் அங்கு அல்கொய்தா இயக்கத்தைச் சார்ந்தவர்கள் எனப்படும் 149 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 25 பேர் வெளிநாட்டவர்கள். கைது செய்யப்பட்டவர்களிடம் நடத்திய விசாரணைகளில் இந்தத் தகவல் கிடைத்ததாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதுபோல சவூதியிலுள்ள சில வங்கிகளையும், நிறுவனங்களையும் கொள்ளை அடிக்கவும் அவர்கள் திட்டம் போட்டிருந்தது தெரிய வந்துள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்டவர்களுக்கும் சோமாலியா மற்றும் ஏமனிலுள்ள தீவிரவாதிகளுக்கும் தொடர்பு இருந்ததாக சவூதி உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் அல்கொய்தா அமைப்புக்காகச் சவூதியில் ஆட்களைச் சேர்த்ததாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.






# எதிர்ப்பையும் மீறி ஐவரிகோஸ்ட் அதிபராக பதவியேற்றார் முன்னாள் அதிபர் லாரன்ட்



(அபிட்ஜான்)


ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட பல்வேறு சர்வதேச நாடுகள் ஆட்சேபம் தெரிவித்த நிலையிலும் மேற்கு ஆபிரிக்க நாடான ஐவரி கோஸ்டின் புதிய அதிபராக லாரன்ட் பக்போ சனிக்கிழமை பதவியேற்றார். முன்னாள் அதிபரான லாரன்ட்டின் பதவிக்காலம் கடந்த 2005 ஆம் ஆண்டுடன் நிறைவடைந்தது.

அதையடுத்து நாட்டில் குழப்பமான சூழ்நிலையே நீடித்தது. இந்நிலையில், ஐ.நா. மேற்பார்வையில் அங்கு தேர்தல் நடைபெற்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியான தேர்தல் முடிவில் எதிர்க்கட்சித் தலைவர் அலசானே ஒட்டாரா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் லாரன்ட்டும், அவரது ஆதரவாளர்களும் ஒட்டாராவின் வெற்றியைப் புறக்கணித்தனர். மேலும், நாட்டின் புதிய அதிபராக லாரன்ட் சனிக்கிழமை பதவியேற்றுக் கொண்டார். சொக்லேட்டில் பயன்படுத்தப்படும் கொக்கோ தயாரிப்பில் ஐவரி கோஸ்ட் உலகிலேயே முன்னிலை வகிப்பது குறிப்பிடத்தக்கது.

# கோபத்தைத் தணிக்குமாம் சீனி மருத்துவ ஆய்வுகளில் தகவல்

(லண்டன்)



ஒரு கரண்டி சீனியை வாயில் போட்டு விட்டால், திடீரெனக் கொந்தளிக்கும் கோபம் எல்லாம் சரியாகிவிடும் என்று மருத்துவ ஆய்வு ஒன்றில் சொல்கிறது.

இதேபோல மன அழுத்தம் இருந்தாலும் சிறிதளவு சீனி சாப்பிட்டால் சரியாகி விடும் என்றும் ஆய்வில் கூறி இருக்கின்றனர்.

அதிலும் எலுமிச்சைச் சாற்றில் சீனி கலந்து சாப்பிட்டால் அதிக பலன் கிடைக்கும் என்றும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கர்நாடக முதல்வராக நீடிப்பதற்கு 500 கோடி கொடுத்த எடியூரப்பா



(சென்னை)

முதல்வராக நீடிப்பதற்காக எடியூரப்பா பாரதீய ஜனதா தலைவர்கள் மற்றும் ஆர்.எஸ்.எஸ். தலைவர்களுக்கு ரூபா 500 கோடி கொடுத்ததாக, கர்நாடக மாநில காங்கிரஸ் தலைவர்கள் குற்றம் சாட்டினார்கள்.

இது தொடர்பாக கர்நாடக காங்கிரஸ் தலைவர்கள் சிலர் சனிக்கிழமை நீதிமன்றத்தில் புகார் மனு கொடுத்தனர்.

பின்னர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது -


கர்நாடகத்தில் நில முறைகேடு, சுரங்கமுறைகேடு, முத்திரை மற்றும் பதிவுத்துறை, வனத்துறை ஆகியவற்றில் முறைகேடு தொடர்பாக முதல்வர் மற்றும் அமைச்சர்கள் மீது புகார் மனுக் கொடுத்துள்ளோம்.

ஆயிரக்கணக்கான ஏக்கர் முறைகேடு நடந்துள்ளது. இதில் ஆயிரக்கணக்கான கோடி ரூபா மோசடி நடந்துள்ளது. இது குறித்து விசாரணை நடத்தவேண்டும்.

முதல்வர் எடியூரப்பா பா.ஜ.க.வின் தேசிய தலைவர்களுக்கும், ஆர்.எஸ்.எஸ. தலைவர்களுக்கும் லஞ்சம் கொடுத்தே தனது பதவியைக் காப்பாற்றிக் கொண்டுள்ளார்.

எமக்குக் கிடைத்த தகவலின்படி, ரூபா 500 கோடிக்கும் அதிகமாக பாரதீய ஜனதா தலைவர்கள் மற்றும் ஆர்.எஸ்.எஸ். தலைவர்களுக்கும் அவர் கொடுத்துள்ளார் எனக் கூறினார்கள்.

# மும்பை சிறைச்சாலையில் மனித எலும்புக்கூடுகள்



(சென்னை)

மும்பையில் உள்ள ஆர்தர்சாலை சிறையில் பூமிக்கடியில் மனித எலும்புகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக மும்பை பொலிஸ் கூறியுள்ளது.


ஆர்தர்சாலை சிறைச்சாலையில் புதிய கட்டடம் ஒன்றுக்கான கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, 6 அடி ஆழத்தில் இந்த எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த எலும்புகள் ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளன என்றும். ஆய்வு முடிவுக்காகத் தாங்கள் காத்திருப்பதாகவும் பொலிஸார் கூறுகின்றனர்.

மகாராஸ்டிர மாநில உள்துறை அமைச்சர் ஆர்.ஆர்.பட்டீலும் எதிர்க்கட்சித் தலைவர் ஏக்நாத் காட்ஸேயும் சிறைச்சாலைக்கு அதிரடிச் சோதனைக்காகச் செல்வதற்கு ஒரு நாள் முன்னதாக இந்த எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மும்பைப் பயங்கரவாதத் தாக்குதலில் தொடர்புடைய அஜ்மால் கர்சாப் உள்ளிட்ட மிக முக்கிய குற்றவாளிகள் இந்தச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இன்று பாபர் மசூதி இடிப்பு தினம் முக்கிய இடங்களில் கடும் பாதுகாப்பு



(சென்னை)

பாபர் மசூதி இடிக்கப்பட்ட தினமான இன்று திங்கட்கிழமை அசம்பாவிதங்கள் நடைபெறாமல் தடுக்கும் முகமாக, இந்தியாவின் முக்கிய இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப் படுத்தப்பட்டுள்ளன.

1992 ஆம் ஆண்டு டிசம்பர் 6 ஆம் தேதி உத்திரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் அமைந்திருந்த பாபர் மசூதி இடிக்கப் பட்டதைத் தொடர்ந்து, ஒவ்வொரு டிசம்பர் 6 ஆம் திகதியன்றும் அசம்பாவிதங்கள் நடைபெறாமல் தடுக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்படுவது வாடிக்கையாகி விட்டது.

இந்த ஆண்டும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக ரயில்வே பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவர் கூறும்போது, பாபர் மசூதி இடிப்பு தினத்தை முன்னிட்டு ரயில் நிலைய பாதுகாப்பு தீவிரப் படுத்தப்பட்டுள்ளது.

வழக்கம்போல 2 நாட்களுக்கு முன்பிருந்தே ரயில்களில் பார்சல்கள் அனுப்பத் தடைவிதிக்கப்படும். அதன்படி சனிக்கிழமை முதல் ரயில்களில் பார்சல்கள் அனுப்பத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ரயில் நிலையங்களில் சந்தேகத்திற்கிடமாகத்திரியும் நபர்களைப் பிடித்து விசாரணை செய்து வருகிறோம் என்று கூறியுள்ளார். தமிழகத்திலும் முக்கிய இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தமிழக பொலிஸ் தெரிவித்துள்ளது.

# கூண்டோடு கலைக்கப்பட்டது ராகுல்காந்தி இளைஞர் அணி



(சென்னை)

காங்கிரசிலிருந்து விலகிய ஜெகன்மோகன் ரெட்டிக்கு ஆந்திர மாநிலத்தில் பெருகி வரும் ஆதரவையடுத்து, அங்குள்ள ராகுல் இளைஞர் அணியை கூண்டோடு கலைத்து விட்டு இளைஞர் அணியில் இருந்தவர்கள் அனைவரும் ஜெகன் மோகன் ரெட்டி முன்னிலையில் அவரது அணியில் சேர்ந்தனர்.

ஜெகன் மோகன் ரெட்டி மிகவும் திறமையானவர். ஏழை, எளிய மக்களுடன் நெருங்கி பழகுபவர். அவர் முதல்வரானால், ஆந்திரா பல மடங்கு முன்னேற்றம் அடையும்.

ராகுல் காந்தி அடுத்த தேர்தலில் பிரதமர் ஆகிவிடலாம் என்று கனவு கண்டார். அது இனிப் பலிக்காது.

மத்தியில் காங்கிரசை ஆட்சியில் அமர வைத்த மாநிலம் ஆந்திராதான். ஆனால், காங்கிரஸ் மேலிடம் ஆந்திராவில் திறமை இல்லாத முதல்வர்களை நியமித்து கலவர பூமியாக மாற்றிவிட்டது.

இதை இனி நாங்கள் அனுமதிக்க மாட்டோம். ஜெகன் போன்ற திறமையான முதல்வரை நாங்களே தேர்ந்தெடுத்து விடுவோம் என்று கூறினார்கள் காங்கிரஸ் இளைஞர்கள்.




# தமிழகத்தில் தொடரும் கனமழை அதிகரிக்கிறது உயிரிழப்புக்கள்


(சென்னை)

தமிழகத்தில் தொடர்ந்தும் பெய்து வரும் வடகிழக்குப் பருவ மழை காரணமாக இறப்பு எண்ணிக்கை இதுவரை 163 ஆக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து தமிழக நிர்வாக ஆணையர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், தமிழகத்தில் வடகிழக்குப் பருவ மழை தீவிரமடைந்துள்ளதால், பல மாவட்டங்களில் தொடர்ந்தும் கன மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கில் சிக்கியும், வீடுகள் இடிந்து விழுந்தும் உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன.

இதுவரை தமிழகத்தில் மழைக்குப் பலியானோர் எண்ணிக்கை 163 ஆக உயர்ந்துள்ளது. அதிகபட்சமாக விழுப்புரம் மாவட்டத்தில் 26 பேர் உயிரிழந்துள்ளனர். 1233 கால்நடைகள் பலியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சி.பி.ஐ இணையத்தளம் மீது தாக்குதல்




(சென்னை)

இந்தியா, ஐ.நா பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினராவதற்கு பிரான்ஸ் ஆதரவு தெரிவித்துள்ளது. 4 நாள் பயணமாக இந்தியாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பிரான்ஸ் அதிபர் சரகோஜி, பெங்களூரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் இதைத் தெரிவித்தார்.

ஆயிரம் கோடி மக்கள் தொகை கொண்டுள்ள இந்தியா, பாதுகாப்பு சபையில் இல்லாததை நினைத்து பார்க்க இயலவில்லை என்றும், இந்தியாவுடன் பிரேசில், ஜெர்மனி, ஜப்பான், ஆபிரிக்கா மற்றும் சில வளைகுடா நாடுகள் நிரந்தர உறுப்பினராவதை தாம் வரவேற்பதாகவும் சரகோஜி அங்கே கூறினார். தனது சுற்றுப் பயணத்தின் முதற்கட்டமாக பெங்களூரின் விண்வெளி ஆராய்ச்சி மையக் கட்டடத்தில் நடந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்தியாவின் அணு உற்பத்திக்குத் தேவையான ஆதாரங்களை பிரான்ஸ் வழங்கும் எனக் குறிப்பிட்டார். பிரான்ஸ் நாட்டின் அரீவா என்றழைக்கப்படும் அணு உற்பத்தி நிறுவனம், மஹாராஸ்டிர மாநிலத்தில் தனது அணு ஆலையை நிறுவ இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# வக்பு வாரிய சார்பில் மருத்துவக் கல்லூரி

(சென்னை)

இஸ்லாமியர்களுக்கான தமிழநாடு வக்பு வாரியத்தின் சார்பில் மருத்துவக் கல்லூரி தொடங்க இருப்பதாக தமிழ்நாடு வக்பு வாரியத் தலைவர் கவிக்கோ அப்துல் ரகுமான் கூறியுள்ளார். செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறியதாவது -

தமிழ்நாடு வக்பு வாரியமும், நீடுர் மதரஸா அமைப்பும் இணைந்து மருத்துவக் கல்லூரி தொடங்க முடிவு செய்துள்ளோம்.


இந்த மருத்துவக் கல்லூரி மயிலாடுதுறை அருகே உள்ள நீடூரில் அமைக்கப்படவுள்ளது. மருத்துவ கல்லூரி கட்டுவதற்காக நீடூர் மதரஸா நிர்வாகம் தங்கள் வக்பு நிலத்திலிருந்து 23 ஏக்கரை அளிக்க முன் வந்துள்ளது. மருத்துவக் கல்லூரியைக் கட்ட ரூபா 60 கோடி வரை தேவைப்படுகிறது. மொத்தம் 170 பேர் வரை தலா ரூபா 10 லட்சம் நன்கொடை தருவதாக உறுதி அளித்துள்ளனர்.

முதற்கட்டமாக 100 மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். மத்திய அரசிடம் முறையாக



அனுமதி பெற்று மருத்துவ கல்லூரி 2012 ஆம் ஆண்டு முதல் செயற்பட தொடங்கும் எனக் கூறினார்.

# வடபகுதி மீன்பிடித் தொழிலுக்கான அபிவிருத்திக்காக
# விசேட திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும்



**வரவு – செலவுத்திட்டத்தில் கடற்றொழில் நீரியல்வள, கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக மற்றும் கால்நடை வளர்ப்பு அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடுகள் குறித்து குழுநிலை விவாதம் இடம்பெற்றது. இதில் ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் கலந்து கொண்டு ஆற்றிய உரை.**

எமது நாட்டில் இப்போது கடல் வலயச் சட்டம் இல்லை. அது அகற்றப்பட்டுள்ளது. இது நல்லதொரு சூழலாகும். கடல் வலயச் சட்டம் அகற்றப்பட்டதால், கூடுதலான நன்மைகளைப் பெற்றவரகள் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள மீனவர்களே. ஆகவே, அவர்கள் சார்பாக நான் கடற்றொழில் அமைச்சுக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும், ஜனாதிபதிக்கும் நன்றி கூறுகிறேன்.

அதேவேளை, இந்த மீனவர்கள் மீண்டும் சுமுகமான ஒரு சூழலில் மீன்பிடித் தொழிலைச் செய்ய வேண்டும். அதற்கான சூழலை உருவாக்க வேணடும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வருபவரான பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், கடல் வலயச் சட்டம் அகற்றப்பட்டு இயல்பு நிலை அங்கே உருவாக்கப்பட்டாலும், அந்தப்பகுதி மீனவர்களின் பிரச்சினைகள் தீரவில்லை. இன்னும் சில முக்கியமான பகுதிகளில் மீன்பிடிக்க அனுமதி கோரியவாறு ஆயிரக்கணக்கான மீன்பிடிக் குடும்பங்கள் காத்திருக்கின் றன. இன்னும் சில மீன்பிடித் துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்படவேண்டியுள்ளன.

இந்திய மீனவர்களுக்கும், இலங்கை மீனவர்களுக்கும் இடையில் நல்லுறவைப் பேணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கின்றன. இப்படிப் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. வடபகுதிக்கு விஜயம் செய்து, இவற்றையும் அந்த மீனவர்களின் நிலைமைகளையும் நேரிலே பார்த்து நன்றாக அறிந்திருக்கிறார் கடற்றொழில் நீர் வள அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்ன.

எமது நாடு கடலால் சூழப்பட்டது. ஆனால், ரின் மீனை இறக்குமதி செய்கிறது என்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பத்திரிகையாளரான சுந்தர் என்பவர் ஒருதடவை குறிப்பிட்டிருந்தார். அவர் குறிப்பிட்டதைப்போலவே இப்போதும் நிலைமைகள் இருக்கின்றன. ஆனால், இந்த நிலைமைகளை மாற்றி, கடற்றொழிற்துறையில் ஒரு துரித அபிவிருத்தியைக் காணவேண்டும் என்று அரசாங்கம் முயற்சி எடுத்துள்ளது.

மீன்பிடித் தொழில் செய்யும் சமூகத்தினரிடமும் முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என அரசாங்கம் விரும்புகிறது. இது பாராட்டத்தக்க நடவடிக்கையாகும். இந்த நாட்டின் பாரம்பரியத் தொழிற்துறையில் மீன்பிடியும் ஒன்று. ஆகவே அது வளர்ச்சியடைந்திருக்க வேண்டும்.

இதுவரை காலமும் எமது நாட்டில் நிலவிய அசாதாரண நிலைமைகள் இந்தத் தொழிலின் முன்னேற்றத்தைத் தடுத்துவிட்டன. ஆனால், இன்று நிலைமைகள் மாற்றமடைந்துள்ளன. இந்த மாற்றத்தை உள்வாங்கிக் கொண்டு தாமும் முன்னேற்றத்தை நோக்கிப் பயணிக்கவே ஒவ்வொரு மீனவர்களும் விரும்புகிறார்கள்.

எங்களின் கடல் அதிக வளத்தையுடையது. அதிலும் வடக்குக் கிழக்கில் மீன்வளம் அதிகமானது என்று தெரிவிக்கப்படுகிறது. ஆனால், இந்த வளமுடைய கடலில் தொழிலைச் செய்யக் காத்திருக்கிறார்கள் கடற்றொழிலாளர்கள். புதிய சூழல் உருவாகிய போதும் இவர்களால் அந்தச் சூழலை அனுபவிக்க முடியவில்லை.

தொழிலுக்குரிய வகையில் அவர்களுக்கான வசதிகளும் பிற ஏற்பாடுகளும் இல்லை என்பதே இங்கே கவனிக்க வேண்டியது. இதற்கு கடற்றொழிலாளர்களுக்கு உதவிகளும் ஏற்பாடுகளும் தேவை. வடபகுதிக் கடற்றொழிலாளர்கள் நீண்டகாலமாகவே கடல் வலயச் சட்டத்தினாலும் பிற நிலைமைகளினாலும் பாதிக்கப்பட்டவர்கள்.

அத்துடன், 2004 இல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினாலும் பாதிக்கபபட்டவர்கள். பின்னர், தொடர்ந்து யுத்தத்தினாலும் இடப்பெயர்வுகளினாலும் இழப்புகளைச் சந்தித்தவர்கள்.

ஆகவே, எல்லா வகையிலும் தாக்கங்களைச் சந்தித்த சமூகத்தினராக இருக்கும் மீனவர்களின் பிரச்சினைகள் பாரதூரமானவையே. எனவே முடிவற்றதாகத் தொடரும் இவரகளுடைய தொழில் பிரச்சினைகளைத் தீர்த்து, இந்த நாட்டின் அபிவிருத்தியில் இவர்களையும் நாம் இணைத்துக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே நாம் இன்னொரு விடயத்தையும் கவனத்திற் கொள்ள வேண்டும். கரையோரப் பகுதிகளே யுத்தத்தால் அதிகமான அழிவுக்கும், பாதிப்புக்கும் உள்ளாகியிருக்கின்றன என்பதையும் இங்கே கவனப்படுத்துகிறேன். இதனால், இவர்கள் மீண்டும் தொழில் முயற்சிகளுக்குத் திரும்புவதென்பது முக்கியமான ஒரு நிகழ்ச்சியே.

மீனவர்களின் இந்தக் காத்திருப்பு என்பது, அவர்களுக்கான உதவிகளை எதிர்பார்த்ததாகவே இருக்கிறது. உண்மையில் ஒரு மீனவர் - தொழிலில் மீண்டும் ஈடுபட வேண்டும் என்றால், சுமார் ஏழு இலட்சம் வரையில் தேவையாக இருக்கிறது. படகு, வலை, வெளியிணைப்பு இயந்திரம் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கான தொகையே இது.

இலகு கடன்திட்டத்தின் கீழ் பெரும் தொகையான பணத்தை கடன் அடிப்படையில் மீனவர்களுக்கு வழங்க வங்கிகள் பின் நிற்கின்றன. இதனால் மீனவர்கள் தங்களது வாழ்வாதாரங்களுக்காக வங்கிக் கடன் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது.

விவசாயிகளுக்கும் சிறு தொழில முதலீட்டாளர்களுக்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கடன் திட்டங்களில் மீனவர்கள் உள்ளடக்கப்படவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டியது. இதனால், இவர்கள் அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்த்திருப்பது தவிர்க்க முடியாதது.

எனவே, இந்த மீனவர்கள் மீண்டும் சுயமாகவும் முன்னேற்றத்தோடும் தொழிலைச் செய்வதற்கு அரசாங்கத்தின் உதவித திட்டங்களோ, கடன் திட்டங்களோ இநதப் பகுதி மீனவர்களுக்கு அவசியமாகிறது.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் கல்லாறு, பேய்ப்பாறைப்பிட்டி, கிளாலி, வலைப்பாடு, பூநகரி, பள்ளிக்குடா போன்ற இடங்களிலும் யாழ் மாவட்டத்தில் - வலி வடக்கு, வடமராட்சி மேற்கு, வடமராட்சி கிழக்குப் பகுதியிலும் - மீனவர்களின் தொழில் விருத்திக்கு இன்னும் பல உதவிகளும், அனுமதிகளும் தேவையாகவே இருக்கின்றன.

வலி வடக்கில் இப்பொழுது தான் மீள்குடியேற்றப்பணிகள் நடைபெறுகின்றன. இருந்தாலும், மீன்பிடிக்கான அனுமதியை வழங்குவதற்கான ஏற்பாடுகளை இப்போதே விரைந்து செய்ய வேண்டும்.

வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணி தொடக்கம், முல்லைதீவு வரையான பகுதி இன்னும் மீன்பிடிக்கு அனுமதிக்கப்படவேயில்லை. இதனால் இந்தப் பகுதிகளில் தொழில் செய்யும் மீனவர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இதில் கிளிநொச்சி கல்லாற்றுப் பகுதியிலுள்ள 350 மீனவக் குடும்பங்களின் நிலைமை என்பது, மிகவும் கவலைக்குரிய ஒன்றாக இருக்கிறது. கிளிநொச்சி மாவட்டத்தில் ஆழ கடலில் மீன் பிடிக்கும் ஒரே தரப்பினர் இவர்களே!

ஆனால், இவர்கள் மீளக் குடியேறி நான்கு மாதங்களைக் கடந்து விட்டபோதும் இன்னும் இவர்கள் மீன்பிடித் தொழிலைச் செய்வதற்கான சூழல் ஏற்படவில்லை. இதற்கு அந்தப் பகுதியில் இன்னமும் கண்ணிவெடிகள் அகற்றப்படவில்லை என்று கூறப்படுகிறது.

இதன்காரணமாக 350 வரையான மீனவக் குடும்பங்கள் தொழிலோ வருமானமோ இல்லாத நிலையிலேயே தொடர்ந்தும் வறுமையில் இருக்கின்றனர். ஆகவே, இந்த மீனவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனச் சம்பந்தப்பட்ட தரப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறே கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் 100 இற்கும் மேற்பட்ட மீனவக்குடும்பங்களின் நிலைமையும் பரிதாபகரமானதாகவே இருக்கிறது!

இவர்களுக்கான மீன்பிடி உபகரணங்கள் கடற்றொழில் நீர்வள அபிவிருத்தி அமைச்சின் மூலம் வழங்கப்பட்டுள்ளன. இவற்றை அமைச்சர் ராஜித சேனாரத்ன அவர்களே கிளிநொச்சியில் வைத்து வழங்கியிருந்தார்.

ஆனால், அவ்வாறு வழங்கப்பட்ட வள்ளங்களும், வலைகளும், மீன் பெட்டிகளும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலேயே வைக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு தொழில் செய்வதற்கு அந்த மீனவர்களுக்கான அனுமதிகள் இதுவரையிலும் பாதுகாப்புத் தரப்பால் வழங்கப்படவில்லை.

ஆகவே, இந்த வறிய மீனவர்களின் வாழ்வாதாரத்தை விருத்தி செய்வதற்காக இரணைமடுக்குளத்தின் நன்னீர் மீன்பிடிக்கு அனுமதி வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

முப்பதாண்டுகளாக இந்தக் குளத்தில் நன்னீர் மீன்பிடியை மேற்கொண்டு வரும் இந்த மீனவர்கள். இந்த மன்றின் மூலம் தங்களுடைய பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கும் என நம்பியிருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்டுகிறேன்.

கடற்றொழிலுக்கு அனுமதியையும், உதவிகளையும் ஏற்பாடுகளையும் செய்கின்ற அதே வேளை, மேலும் சில முக்கியமான விடயங்களிலும் கடற்றொழில் அமைச்சுக் கவனம் செலுத்த வேண்டும். எமது நாட்டின் கடற்பகுதியை வடக்குக் கிழக்கு மாகாணங்களே அதிகமாகக் கொண்டிருக்கின்றன.

ஆனால், கடற்றொழில் விருத்திக்கான ஆய்வு மையங்களோ, அபிவிருத்திக்கான கட்டுமானப் பகுதிகளோ, ஐஸ் உற்பத்திச் சாலைகளோ இந்தப் பகுதிகளில் அமைக்கப்படவில்லை. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் ஐஸ் உற்பத்திச் சாலைகள் அமைக்கப்படுவது அவசியம்.

இதேவேளை குருநகர்ப் பகுதியின் மீன்பிடித் துறைமுகம், வலைப்பாடு மீன்பிடித் துறைமுகம் ஆகியவற்றையும் விரைவாகப் புனரமைப்புச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் குருநகர், நாவாந்துறை, நாச்சிக்குடா போன்ற இடங்களில் மீனவர் குடியிருப்புகளை உருவாக்கி அந்த மக்களின் குடியிருப்புப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறேன்.

ஒட்டு மொத்தத்தில் வட பகுதியின் மீன்பிடித் தொழிலுக்கான அபிவிருத்தியில் ஓராண்டுக்கான விசேட விரைவுத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தினால், நாட்டின் ஏனைய பிரதேச மீனவர்களின் வளர்ச்சியோடு இவர்களையும் இணைத்துக் கொள்ளலாம்.

நீண்டகாலமாகத் தடைப்பட்டும் பிற்படுத்தப்பட்டும் இருந்த தொழிற் பிரதேசத்தையும் அந்தப் பிரதேசத்தின் தொழில் விருத்தியையும் மேம்படுத்துவதற்கு இத்தகைய திட்டமொன்று அவசியமாகவுள்ளது.

மேலும் இந்திய மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கைகள் இப்போது கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும் என்பதையும் இங்கே வலியுறுத்துகிறேன்.

கடற்றொழில் துறையில் இருக்கும் நெருக்கடிகளைப் போலவே கால்நடை அபிவிருத்தி மற்றும் கூட்டுறவுத் துறைகளிலும் நெருக்கடிகள் இருக்கின்றன. வடக்கிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த காலத்தில் நிலவிய போர்ச் சூழலினால் பெரும் நட்டங்களைச் சந்தித்துள்ளன என்பதை இந்த மன்றிலே ஏற்கனவே சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

குறிப்பாக அனைத்துச் சங்கங்களுடைய சொத்துகளும் முழுதாகவோ அல்லது பகுதியாகவோ யுத்தத்தால் அழிவடைந்துள்ளன.

இதனால் இந்தச் சங்கங்கள் பெரும் நட்டத்தைச் சந்தித்துள்ளன. அதிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள சங்கங்கள் முழுமையான நட்டத்தையே அடைந்துள்ளன.

லாபமற்ற நிலை மற்றும் பற்றாக்குறைகளால் நெருக்கடி நிலையில் இருந்தபோதும் இந்தச் சங்கங்கள் போர்க் காலத்திலும் மீள்குடியேற்றக் காலத்திலும் மக்களுக்கான பணிகளைத் திறம்படச் செய்துள்ளன.

ஆனாலும், இந்தச் சங்கங்களின் முழுமையான செயற்பாட்டுக்கு கூட்டுறவு அமைச்சு ஆதரவளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் விளைவிக்கப்படும் நெல்லைக் கொள்வனவு செய்யும் பணியைக் கூட்டுறவுச் சங்கங்களே மேற்கொண்டு வருகின்றன.

ஆகவே நெல்லைக் கொள்வனவு செய்வதற்கான நிதி மற்றும் களஞ்சிய வசதிகளுக்கு கூட்டுறவு அமைச்சின் உதவிகள் தேவைப்படுகின்றன. இதேவேளை, இந்தச் சந்தர்ப்பத்திலே கால்நடை வளர்ப்புத் தொடர்பாக கிளிநொச்சி யாழ்ப்பாண மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கும் நிலைமைகளைப் பற்றியும் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

கிளிநொச்சி மாவட்டத்தில் போரின் காரணமாக கட்டாக்காலிகளாக நிற்கும் பல ஆயிரக்கணக்கான கால்நடைகளை - மிகக் குறைந்த காலப்பகுதியில் - கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்துள்ளது கால் நடை அபிவிருத்தித் திணைக்களம். இது பாராட்டப்பட வேண்டிய பணியாகும்.

இந்தக் கால்நடைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தபடியால்தான் இந்த மாவட்டத்தில் விவசாயச் செய்கையை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இதே வேளை அழிவடைந்த கால்நடைகளைப் பெருக்கிக் கொள்ளவும் கால்நடைகளின் மூலமான வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொள்ளவும் கால்நடை அபிவிருத்தித் திணைக்களத்துக்கு வடபகுதியில் உத்தியோகத்தர் பற்றாக்குறையும், வளப்பற்றாக்குறைகளும் நிலவுகின்றன.

# ஜனாதிபதிக்கு எதிரான லண்டன் ஆர்ப்பாட்டம் மேற்குலகின் நிலைப்பாடுதான் என்ன?

## உலகிற்கு அம்பலமாக்க வேண்டும் என்கிறார் பிரதமர்



(கொழும்பு)

பயங்கரவாதம் தொடர்பாக சில ஐரோப்பிய மற்றும் மேற்குலக நாடுகள் மேற்கொள்ளும் இரட்டை நிலைப்பாடு உலகிற்கு அம்பலப்படுத்தப்பட வேண்டும் என பிரதமர் டி.எம்.ஜயரட்ண நேற்றுக் கூறியுள்ளார்.

லண்டனில் புலிகளின் அனுதாபிகளால் கடந்த வாரம் ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிராக நடத்திய ஆர்ப்பாட்டச் சம்பவம் தொடர்பில் உலகின் எந்தவொரு நாடும் அமைதியாக இருக்கக் கூடாது என அறிக்கையொன்றில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடந்த காலங்களிலும் இத்தகைய பல சூழ்நிலைகளுக்கு முகம்கொடுத்துள்ளதாகவும், இச்சக்திகளைத் தோற்கடிப்பதற்கு அவற்றை நாம் பலமாக எதிர்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# —பால்வினை நோய்களை— கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டளவில், பால்வினை நோய்களை யும், தாய் மூலம் கருவில் உள்ள சிசுவிற்கு பரவும் எச்.ஐ.வி. நோயினையும், இலங்கையில் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முடியும் என வைத்திய நிபுணர் சுஜாத்தா சமரகோன் தெரிவித்துள்ளார்.

பெண் கருத்தரித்தவுடன், கரு குறித்த விபரங்களை அறிவதை கட்டாயமாக்குவதன் மூலம், தாய் மூலம் சிசுவிற்கு எச்.ஐ.வி. தொற்றை பாரிய அளவில் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அமைப்புக்களின் உதவியுடன் இந்தப் பணியினை மிக இலகுவாக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோழி இறைச்சி இறக்குமதி

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த அரசு பெரிய வெண்காயம், கோழி மற்றும் முட்டையை இறக்குமதி செய்ய உள்ளது.

இதனை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

3000 தொன்கள் கோழி இறைச்சிக்கு உள்ளூர் சந்தையில் தட்டுப்பாடு நிலவுகிறது. வடக்கில் புதிய சந்தை வசதிகளினால் ஏற்பட்டுள்ள தேவையைச் சமாளிக்கக்கூடிய நிலையில் உற்பத்தி இல்லை என்றார் அமைச்சர்.

முக்கியமான இந்த நுகர்வுப் பண்டங்களின் விலையை உயர்த்துவதன் மூலம் வர்த்தகர்கள் உயர்ந்த வருமானத்தை எதிர்பார்க்கலாம். நாட்டின் கால நிலையும் வெண்காயம் மற்றும் முட்டையின் விலையேற்றத்துக்குக் காரணமாகும்.

பண்டிகைக் காலங்களில் உள்ள தேவையைச் சமாளிக்க அரசு இப்பண்டங்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

# இலங்கைத் தமிழர்கள் தாய்லாந்தில் கைது அனைவரும் திருப்பி அனுப்பப்பட உள்ளனர்!

(கொழும்பு)

தாய்லாந்தில் கைது செய்யப்பட்ட ஈழத்தமிழர்கள் படிப்படியாக இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

சுமார் 50 ஈழத்தமிழர்கள் கடந்த இரு வாரங்களில் கொழும்புக்கு நாடு கடத்தப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தாய்லாந்தின் குடிவரவுச் சட்டங்களை மீறி அங்கு தங்கியிருந்ததாகக் கூறி சுமார் 200 வரையான ஈழத்தமிழர்களைத் தாய்லாந்து பொலிஸார் கைது செய்திருந்தனர்.

மூன்றாவது நாடு ஒன்றில் அரசியல் புகலிடம் கோரும் நோக்கத்துடனேயே இவர்கள் தாய்லாந்தில் தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.

இவர்களில் 50 பேர் வரையில் கடந்த இரண்டு வாரங்களில் இலங்கைக்கு பலவந்தமாகத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதுடன், ஏனையோர் பாங்கொக்கில் உள்ள தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான அவசரகாலக் கடவுச்சீட்டு மற்றும் விமானப் பயணச்சீட்டு ஆகியவற்றை ஒழுங்கு செய்து கொடுக்கும் முயற்சியில் தாய்லாந்து அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை, சிறிலங்காத் தூதரகமும் இவர்களைக் கொழும்புக்குக் கொண்டு வரும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

# அரச நிறுவனங்களில் டெங்குக் கட்டுப்பாடு நடவடிக்கைக்கு பணிப்பு

(கொழும்பு)

டெங்கு நுளம்பு பரவும் வகையில் சுற்றாடலை சுத்தப்படுத்தாமல் இருக்கும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தை முன்னெடுக்கும் அதிகாரிகளுக்கே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான அரச நிறுவனங்களின் பட்டியலை ஜனாதிபதிக்கு கையளிக்கவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த வருடத்திற்கான நான்காவது டெங்கு ஒழிப்பு வாரம் கடந்த முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதிவரை நடை முறையில் உள்ளது.

இதன்போது, கடந்த நாட்களில், அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது, 90 சதவீதமான இடங்கள் நுளம்பு பரவுவதற்கான முறையில் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, வெள்ளம் ஏற்பட்ட பிரதேசங்களில், தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் அடிப்படையில், குறித்த பிரதேசங்களுக்கு சென்றுள்ள பொது சுகாதார பரிசோதகர்களின் ஊடாக, இதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதாக அகில இலங்கை பொது சுகாதார பரிசோதகர் சங்கத் தலைவர் உப்புல் ரோகண தெரிவித்துள்ளார்.

# இலங்கை தமிழ் அகதிகளுக்கு பிறப்பு சான்றிதழ் விநியோகம்

(கொழும்பு)

தமிழக அகதி முகாம்களில் உள்ள இலங்கை அகதிகளுக்கு பிறப்பு சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்தியாவுக்கான பிரதி இலங்கை உயர்ஸ்தானிகர் வடிவேல் கிருஷ்ணமூர்த்தியினால் இவை விநியோகிகப்பட்டுள்ளதாகவும், சுமார் 16 வருடங்களின் பின் னர் அவர்களுக்கான பிறப்பு சான்றிதழ்கள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி தமிழகத்தின் விருதுநகரில் உள்ள வேம்பு கோட்டை அகதி முகாமின் அகதிகளுக்கு நேற்றுமுன்தினம் பிறப்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழக அரசாங்கமும், இலங்கை உயர்ஸ்தானிகரகமும் இணைந்து ஈழ அதிகள் பேரவையின் ஏற்பாட்டில் நடத்திய நடமாடும் சேவை ஒன்றின் போது இந்த சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது சுமார் 238 சிறுவர்களுக்கான பிறப்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மதுரையில் இடம்பெற்ற இவ்வாறான நடமாடும் சேவை ஒன்றின் போது, 251 பிறப்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது.

அத்துடன், எஞ்சியுள்ள முகாம்களிலும் இவ்வாறான நடமாடும் சேவைகள் நடத்தி, எதிர்வரும் காலங்களில் பிறப்பு சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதி உயர்ஸ்தானிகர் வடிவேலு கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## யாழ். நகர் - தீவகம்...

வண்டிகளும் இப்பகுதியூடாக செல்வது நிறுத்தப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருக்கும், யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கும் அறிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ். மத்திய பேரூந்து நிலையத்தினரும் தமது பயணிகள் சேவை இவ்வீதியூடாக நிறுத்தப்பட்டுள்ளமையையும் உறுதிப்படுத்தினர்.

கோண்டாவிலில் அமைந்துள்ள வடபகுதி பேரூந்து நிலைய காரியாலயத்தில் இருந்து தமது அதிகாரி ஒருவர் மேற்படி பகுதிக்கு விஜயம் செய்து திரும்பியதன் பின்னர் இப்பகுதியூடாக போக்குவரத்து நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, அரிப்பெடுத்த இவ்வீதி உடனடியாக செப்பனிடயாழ். அரச அதிபரினால் பணிக்கப்பட்டபோதும் நேற்று பி.ப 3.00 மணிவரை செப்பனிடப்படவில்லை எனத் தெரியவருகின்றது. (05,பா)

## அரசு...

அரசு அறிவித்துள்ளது.

இதனால் ஜனாதிபதிக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளும் பாதிப்புக்குள்ளாகும் நிலை உருவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வடபகுதியில்....

திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

வடக்கு மக்களின் உளச்சுகாதாரத்தை மேம்படுத்தும் இத்திட்டத்தில் பங்குபற்ற சந்தர்ப்பம் கிட்டியமை மகிழ்ச்சி அளிப்பதாக உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் பத்து உளச் சுகாதார மையங்கள் நிறுவப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் மக்களின் உளச் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டியது இன்றியமையாத தேவையாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

## மழை பொழிவு....

காற்றுடன் கூடிய மழைப் பெய்யக்கூடுமெனவும், அதனால் மீனவர்கள் அவதானத்துடன் தொழில் செய்வது நன்று எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, நேற்றுக் காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் கொழும்பு மாவட்டத்தில் ஆகக்கூடுதலான 118.2 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

மேலும், ரத்மலானையில் 93.6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், மட்டக்களப்பில் 90.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், நுவரெலியாவில் 68.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

## திருமலையில் கண்ணீருடன்....

53 பேர் நேரடியாக ஆணைக் குழுவின் முன் சாட்சியமளித்ததுடன் ஏனையோர் எழுத்து மூலமாக சாட்சியமளித்ததாக தெரிவித்தார். யுத்த கால வேளையில் காணாமல் போனோர் தொடர்பாக அதிகளவிலான முறைப்பாடுகள் கிடைக்கபெற்றதாக அவர் தெரிவித்தார்.

இங்கு சாட்சியமளித்த பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் GTN னுக்காக கருத்து தெரிவித்த போது:-

எனது மகனை 2006 ஆம் ஆண்டு பங்குனி மாதம் இனம் தெரியாதவர்கள் வெள்ளை நிற வாகனத்தில் வந்து எமது கண் முன்னேயே இழுத்துச் சென்றதாகவும், தாம் அவர்களது காலில் விழுந்து கதறி அழுத போது அவர்கள் இரக்கம் காட்டவில்லை எனவும் அன்று தொடக்கம் எனது மகனை தேடி வருவதாகவும் கண்ணீர் மல்க தெரிவித்தார்.

இங்கு சாட்சியமளித்த பல மக்களிடையே நாம் கதைத்த போது அவர்கள் பின்னணியிலும் இவ்வாறான ஒரு சோகக் கதையே காணப்படுகிறது.

ஆனால் மக்களும் ஏதோ ஒரு சிறிய நம்பிக்கையின் பேரிலேயே சாட்சியமளிக்க வந்துள்ளதைக் காண முடிந்தது.

## வலுவடையும் வர்த்தக...

என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விடயம் குறித்து இலங்கைக்கு வருகை தந்திருந்த பாகிஸ்தானிய முதலீட்டுத் துறை அமைச்சர் சலீம் எச்.மண்ட்வீவல, இலங்கை முதலீட்டு சபை உயர் மட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானிய ஜனாதிபதி அசிவ் அலி சர்தாரி இலங்கைக்கு அண்மையில் வருகை தந்திருந்தபோது, அவருடன் பாகிஸ்தானிய முதலீட்டுத்துறை அமைச்சரும் வருகை தந்திருந்தார்.

இலங்கை அரசாங்கத்துடன் மேற்கொண்ட பேச்சு வார்த்தைகள் மூலம் இலங்கை மற்றும் பாகிஸ்தான் நாடுகள் தமது வர்த்தக நடவடிக்கைகளை சிறந்த முறையில் மேம்படுத்த முடியும் என அவர் பாகிஸ்தானில் வழங்கிய செவ்வி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

# ஜயலத்தின் குடியுரிமை பறிக்க திரைமறைவில் சதி முயற்சி!



(கொழும்பு)

லண்டன் தமிழர்களால் அண்மையில் இலங்கை ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஜயலத் கலந்து கொண்டுள்ளார் அல்லது பின்னிணியில் செயற்பட்டார் என்பது தொடர்பாக நாடாளுமன்றில் அனல் பறக்கும் வாதப்பிரதி வாதங்களுக்கிடையில் அவரது குடியுரிமையைப் பறிப்பதற்கான முயற்சி திரைமறைவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:பிரித்தானியாவின் ஒக்ஸ்போட் சபையில் பேசும் மகிந்தவின் வாய்ப்பு பறிபோனதில் ஜயலத் ஜெயவர்த்தனாவின் பங்கு உள்ளது என தெரிவித்து வரும் இலங்கை அரசு, அவரின் நாடாளுமன்றப் பதவியை பறிப்பதற்குத் திட்டமிட்டு வருவதுடன்,

ஜெயவர்த்தனாவின் நடவடிக்கைக்கு எதிராக 100 இற்கு மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களை தாம் சேகரித்துள்ளதாகவும், அதன் மூலம் ஜெயவர்த்தனாவின் குடியுரிமையும் பறிக்கப்படும் என இலங்கை அரசின் பிரதம கொறடா தினேஸ் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் ஜெயவர்த்தனா இருந்ததாக இலங்கை புலனாய்வுத் துறையினர் தமக்கு தகவல்களை வழங்கியதாகவும், அவர் மீதான தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் அது உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கும், தனக்கும் தொடர்பில்லை என தெரிவித்துள்ள ஜெயவர்த்தனா, அது நடைபெற்ற சமயம், தான் மிலான் நகரில் இருந்ததாக தெரிவித்துள்மை இங்கு குறிப்பிடத்தக்கது.



தினக்குரல் பிரதம ஆசிரியர் வி.தனபாலசிங்கம் எழுதிய ஆசிரியத் தலையங்கங்களின் தொகுப்பான 'ஊருக்கு நல்லது சொல்வேன்' நூலின் வெளியீட்டு விழா கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது, முன்னாள் நீதியரசர் சி.விக்கினேஸ்வரனுக்கு புரவலர் ஹாசிம் உமர் நூலின் பிரதியைக் கையளிப்பதைக் காணலாம்.

# அரசுக்கு எதிரான புலிகளின் பிரச்சாரம் அதை முறியடிக்க அரசு முயற்சிக்க வேண்டும்

## அரசுக்கு எச்சரிக்கை விடுத்தது லண்டன் ஆர்ப்பாட்டம்

புலிகளின் பிரச்சாரங்களை முறியடிப்பதற்கு வெளிவிவகார அமைச்சு கூடுதல் முனைப்பு காட்ட வேண்டுமென சர்வதேச பயங்கரவாத ஒழிப்பு தொடர்பான பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில், லண்டனில் நடைபெற்ற போராட்டம் இலங்கை வெளிவிவகார அமைச்சிற்கு ஓர் சிறந்த எச்சரிக்கை சமிக்ஞையாக கருதப்பட வேண்டுமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தொடர்பாடல் மற்றும் பிரச்சாரம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தக் காலத்தில் இலங்கையில் இடம்பெற்ற உண்மை நிலைமை குறித்து உலக சமூகத்திற்கு சரியான முறையில் உணர்த்தப்பட வேண்டியது அவசியமானதென அவர் குறிப்பிட்டள்ளார்.நோர்வேயை மையமாகக் கொண்டு புலிச் செயற்பாடுகளை மேற் கொண்டு வரும் நெடியவனின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண் டும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் நடவடிக்கைகளை உன்னிப்பாக கண்காணிப்பு செய்யக்கூடிய ஓர் பொறிமுறையை உருவாக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

புலிகளின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் தன்னார்வ தொண்டு நிறுவ னங்களின் மூலம் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள புலிகள் கூடுதல் முனைப்புக்காட்டி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## லியாம் பொக்ஸ் மீது...

இது இலங்கைக்கு சார்பான அவரின் கொள்கைகளை எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கை அரசைக் காப்பாற்ற பொக்ஸ் முயற்சிகளை மேற்கொள்கிறார் ஆனால் இலங்கை அரசு மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் மிகவும் அதிகம்.

இலங்கைமீது சுயாதீன விசாரணைகள் அவசியம் என பொக்ஸ் இன் மேலதிகாரியான பிரதமர் டேவிட் கமரோன் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் பொக்ஸ் மூன்று தடவை இலங்கைக்குச் சென்றுள்ளார். அது தவிர அண்மையில் அவர் இருமுறை அங்கு சென்றுள்ளார். ஆனால் அவரின் மூன்று பயணங்களுக்குமான செலவுகளை இலங்கை அரசே முழுமையாக பொறுப்பேற்றுக் கொண்டது.

மற்றைய இரு பயணங்களுக்குமான செலவுகளை இலங்கை அபிவிருத்தி நிதியம் என்ற அமைப்பு ஏற்றுக்கொண்டது. ஆனால் கூகுள் இணையத்தளத்தில் தேடியபோது அவ்வாறான அமைப்பின் தடையம் எவையும் காணப்படவில்லை.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் விழாவில் கலந்து கொள்வதற்காக அவர் 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அங்கு சென்றிருந்தார். ஆனால் அவர் அங்கு தமிழ் மக்களை சந்திக்கவில்லை.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வெளிநாடு வழங்கும் பணத்தில் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வது சட்டத்தை மீறும் செயலாகும்.

2008ஆம் ஆண்டும் பொக்ஸ் இவ்வாறான செயலை மேற்கொண்டிருந்தார். அவர் நிழல் பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலத்தில் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றிடம் இருந்து 50,000 ஸ்ரேலிங் பவுண்ஸ்களை பெற்றிருந்ததாக த ரைம்ஸ் என்ற ஊடகம் தெரிவித்திருந்தது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒக்ஸ்போர்ட் பல்கலை மாணவருக்கும் புலிகளுக்கு இடையிலும் தொடர்பாம்!

## ஜே.வி.பி.யின் கண்டுபிடிப்பு இது



(கொழும்பு)

பிரித்தானிய ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் மாணவர் அமைப்புக்கும், புலிகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக, ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

இது தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி பிரித்தானியா சென்றிருந்தபோது, அந்த நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்களை தாம் கண்டிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், பிரித்தானியாவின் புலம்பெயர்ந்த தமிழர்கள் மேற்கொள்கின்ற இவ்வாறான ஆர்ப்பாட்டங்களையும், அவர்கள் ஒன்றிணைந்து மீண்டும் தமிழீழத்தை உருவாக்க முயற்சிப்பதையும் தாம் எதிர்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

# மின்சாரம் தாக்கி ஒருவர் பலி!

(யாழ்ப்பாணம்)

வீட்டுக்கு மின் இணைப்புக்களை வழங்கும்போது, மின் தாக்குதலுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

மேற்படி சம்பவமானது நேற்றுக்காலை அச்சுவேலி பத்தமேனிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் குடும்பஸ்தரான ராஜரெட்ணம் ராஜகமலன் (வயது - 34) என்பவரே மரணமானவராவார்.

இவரது சடலம் மருத்துவப் பரிசோதனையின் பின்பு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

# தமிழ்மொழி அமுலாக்கத்துக்கு விரைவில் புதிய செயற்திட்டம்!

(கொழும்பு)

இன்னும் சில வருடங்களில் அரசாங்க நிறுவனங்களில் தமிழ் மொழியில் தொடர்பாடக் கூடிய சூழ்நிலை உருவாகும் என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாட்டின் சகல பாகங்களிலும் வாழும் தமிழ்மக்கள் அரசாங்க நிறுவனங்களில் தமிழ் மொழியில் தொடர்பாடக் கூடிய சாத்தியம் விரைவில் ஏற்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சிங்கள மொழியுடன் தமிழ் மொழியையும் அரச கரும மொழியாக அமுல்படுத்துவதற்கான நடைமுறைச் சாத்தியமுடைய திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்பேசும் மக்கள் தங்களது கடமைகளை தங்கு தடையின்றி மேற்கொள்ளக்கூடிய ஓர் நிலையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் அரசாங்கங்களுடன் கூட்டணி அமைத்துக் கொண்ட இடதுசாரிக் கட்சிகள் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து கூடுதல் கவனம் செலுத்தவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.


A/L 2010 ? What Next?
CIMA-UK, Engineering-USA, BIT

நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
SMS your name & course to 772 395 895 & Get Schol.
Free : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL
Fast Track
MCS Supported By UNDP/JRRP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில்,
324, Palaly Road, Campus Junction, Jaffna.
Government Schol.
(C/246) Closing Date 07.12.2010

யாழ்.மாவட்ட மக்களுக்கு
SEC ஷாலோம் SHALOM
SHALOM வழங்கும் நற்செய்தி...!
உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்.
குறித்த தவணைக்குள்.... குறைந்த செலவில்.... நவீன முறையில்...
வீடுகள்-கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும் - மாபிள் - ரெறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்-
SHALOM 20/1, 2வது ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (C/245)
தீவகத்தில் SHALOM, சிற்பன வீதி, வங்களாவடி, வேலணை.
தொலைபேசி : 0217901798 - 0771044861


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2010 டிசம்பர் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.